# இயல்-4

## அற இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

பிறப்பில் மனிதனாய் பிறத்தலே சிறந்தது என்பதை அனைவரும் அறியக்கூடிய ஒன்று. அத்தகு நிலையில் மனிதன் வாழும்போது உயர்ந்த நிலையை எய்துவதற்கு அவனுடைய ஈகையே காரணமாகிறது. ஒரு மனிதன் வாழ்க்கையில் அவனுக்கென்று உள்ள கடமைகளைச் சரியாகச் செய்தும், ஒழுக்க மேம்பாடு உடையவனாகவும் வாழ்வது சிறப்பு. அத்தகு வாழ்க்கைமுறை பற்றி இவண் ஆராயப்பட உள்ளது.

**இல்லறம்**

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் தங்களை மற்றவர்கள், பழித்துப் பேசுகின்ற குற்றச் செயல்களைச் செய்யாமல் வாழ்ந்தால் நன்மையாகும் என்பதை வள்ளுவர்,

> ”அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்
> பிறன்பழிப்பது இல்லாயின் நன்று”[1]

எனக்கூறுகின்றார். இல்லறத்தில் வாழ்கின்றவர்கள், பழிச்செயல்களுக்கு அஞ்சி வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார். இல்வாழ்க்கை என்பது நன்மக்களைப் பெறுதலும், அன்பு, அடக்கம், ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து வழுவாமலும், புகழ்பெற வாழ்தலுமே சிறப்புடையதாகும். இதனை,

> ”அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.”[2]

என்று வள்ளுவர் உரைக்கின்றார். பண்பு என்பது அன்போடு வாழ்வதாகும். அதன் பயன் என்பது அறத்தோடு இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதைச் சுட்டுகின்றார். அறநெறியில் நின்று வாழ்கின்றவனை வள்ளுவர்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" [3]

எனும் குறட்பா வழி உணர்த்துகின்றார். அறநெறியில் வழுவாமல் வாழ்கின்றவனை தெய்வத்திற்கு ஒப்பாக மதிப்பார்கள் என சிறப்பித்துக் கூறுகின்றார். அறத்தின் வழியில் இல்லறம் நடத்த வேண்டும் என்பதை வள்ளுவர்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்."[4]

என்று உணர்த்துகின்றார். அறத்தின் வழியில் இல்வாழ்க்கை வாழ்ந்தால் அதன் பயன் சிறப்புடையதாக அமையும் என்கிறார். இல்லறத்தின் நோக்கம் என்பது அறத்தை வளர்ப்பதாகும் என்பதை அறியமுடிகிறது. இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்பது,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" [5]

மனைவியின் நற்பண்பும், நல்ல மக்களைப் பெறுதலுமே ஆகும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். நல்ல மனைவியும், நல்ல குழந்தைகளும் இல்வாழ்க்கைக்கு நல்ல அணிகலன்களாகும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே நாலடியாரில்,

"நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும் - மேலாய

வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழு மாண்கற்பின்

இல்லாள் அமர்ந்ததே இல்" [6]

எனும் பாடல் உணர்த்துகின்றது. செல்வம் முதலியவற்றைவிட மனைவியின் நற்குணமே இல்வாழ்க்கைக்கு முதன்மையானது என்று விளக்குகின்றது. இல்லற வாழ்வில் வழுவாமல் வாழ்கின்றவர்கள் பிறர் மனைவியை விரும்பக் கூடாது என்பதை நாலடியார்,

"அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்
நிச்சம் நினையுங்காற் கோக்கொலையால் - நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன்தாரம்
நம்பற்க நாணுடை யார்" [7]

என எடுத்துரைக்கின்றது. பிறர் மனைவியை விரும்புகின்றவர்களுக்கு துன்பங்களே நேரும். அதனால் தன் மனைவியுடன் மட்டுமே வாழவேண்டும். அந்த இல்லற வாழ்க்கைதான் சிறப்படையும் என்கிறது. இதே போன்று,

"அறம்புகழ் கேண்மை பெருமைஇந் நான்கும்

பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா - பிறன்தாரம்

நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம்என்று

அச்சத்தோ டிந்நாற் பொருள்."[8]

எனும் பாடலில் பிறர் மனைவியை விரும்புகின்றவர்களுக்கு புண்ணியம், புகழ், தக்கார் நேயம், வீரம் இந்த நான்கும் நீங்கி பகை, பழி, பாவம், அச்சம் என்ற நான்கும் அவர்களை வந்து சேரும். அதனால் இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் தகாத தீய செயல்களைச் செய்யக்கூடாது என வலியுறுத்துகின்றது.

இக்கருத்தைப் போன்றே வள்ளுவரும்,

"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்

இகவாவாம் இல்இறப்பான் கண்"[9]

எனக் குறட்பாவழி விளக்குகின்றார். பிறன் மனைவியிடம் நெறிதவறி நடப்பவனிடம் பகை, பாவம், அச்சம், பழி என்னும் இந்த நான்கு குற்றங்களும் என்றுமே நீங்காமல் இருக்கும் என்கிறார். அறச் செயல்களால் மட்டுமே இன்பம் கிடைக்கும் என்பதனை வள்ளுவர்,

“சிற்றின்பம் வெ.'.கி அறன்அல்ல செய்யாரே
மற்றுஇன்பம் வேண்டு பவர்” [10]

எனும் குறட்பா மூலம் எடுத்துரைக்கின்றார். அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர் நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் இல்லாதவற்றைச் செய்யமாட்டார்கள் எனக் கூறுகின்றார். இல்லறத்தில் உள்ளவர்களுக்குச் சிறந்த செல்வங்கள் மூன்றாகும். இதனை,

“பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறில் பொறையும் - அறவினையைக்
காராண்மை போல ஒழுகுதலும் இம்மூன்றும்
ஊராண்மை என்னும் செருக்கு”[11]

என்று நல்லாதனார் திரிகடுகப் பாடலில் உணர்த்துகின்றார். இல்வாழ்க்கை வாழ்கின்றவர்கள் மற்றவர் தன்னைப் பெருமைப்படுத்திப் பேசும்பொழுது நாணம் அடைதலும், தன்னை விரும்பாதவர் தன்னை இகழுமிடத்துக் கோபிக்காது பொறுத்துக் கொள்ளுதலும், அறச்செயல்களை மேகம் போன்று கைம்மாறு கருதாது கொடுத்தலும் ஆகிய இம்மூன்றுமே சிறந்த செல்வங்கள் ஆகும் என்று விளக்குகின்றார். இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் பலரோடு பகிர்ந்து உண்ணுதல் வேண்டும் என்பதனை நல்லாதனார்,

“வெகுளி நுணுக்கும் விறலு மகளிர்கட்கு
ஒத்த வொழுக்க முடைமையும் - பாத்துண்ணும்
நல்லறி வாண்மை தலைப்படலும் இம்மூன்றும்

தொல்லறி வாளர் தொழில்" [12]

எனும் திரிகடுகப் பாடலில் விளக்குகின்றார். எழுந்த சினத்தை அடக்குதல், பெண்கள் போற்றுகின்ற ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், சுற்றத்தோடு பகிர்ந்து உண்ணுதல் என்ற மூன்றும் மனிதன் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டியவை என்கிறார். இல்வாழ்க்கை வாழுகின்ற பெண் வீட்டைப் பேணும் முறைபற்றி வண்கயத்தூர் முள்ளியார்,

"காட்டுக் களைந்து கலம்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்லது உறல்வேண்டு வார்" [13]

என ஆசாரக்கோவைப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். நன்மை அடைவதை விரும்புபவர், விடியற்காலையில் விழித்தெழுந்து வீடு விளங்கும் வண்ணம் குப்பைகளைப் போக்கி, பசுஞ்சாணநீரைத் தெளித்துச் சுத்தம் செய்து, பின்கரிய கலங்களைக் கழுவி, நீர்ச்சால், கமண்டலங்கள் நிறையுமாறு மலர் அணிந்து பின் அடுப்பினுள் தீ மூட்டுதல் வேண்டும் என்கிறார். இதுவே இல்லறப் பெண்களின் கடமையாகும் என்பதை அறிய முடிகிறது. இல்லறத்தான் பாதுகாக்க வேண்டியவை என்று,

"தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்று
உன்னித்து வைத்த பொருளோடு இவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும்." [14]

இவைகளை வண்கயத்தூர்முள்ளியார் ஆசாரக்கோவையில் எடுத்துரைக்கின்றார். தன் உடலும், மனைவியும், தன்னிடத்தில் அடைக்கலமாக வைக்கப்பட்ட

பொருளும், தன்னுயிர்க்கு உறுதியாகும் என்று எண்ணிச் சேர்த்து வைத்த பொருளும் ஆகிய இந்த நான்கினையும் பொன்னைக் காப்பது போல நன்கு பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்காது விட்டால் மிகுந்த துன்பம் உண்டாகும் என்கிறார். இவை இல்லறத்தானின் கடமைகளாகும் என்று உணர்த்துகின்றார். இதே போன்று,

“நந்தெறும்பு தூக்கணம் புள் காக்கை என்றிவை போல்
தம் கருமம் நல்ல கடைப்பிடித்துத் தம் கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றி யானும் படும்” [15]

எனும் ஆசாரக்கோவைப் பாடலில் இல்வாழ்க்கையின் ஒழுக்கம் பற்றி வண்கயத்தூர் முள்ளியார் விளக்குகின்றார். ஆக்கமுடைய எறும்பு, தூக்கணம் குருவி, பறவையாகிய காக்கை என்ற இவைகள் தன்னுடைய செயல்களை தானாகவே செய்வதுபோல், இல்லறத்தானும் தன் காரியத்தைச் சோர்வடையாமல் தானே செய்து முடிக்க வேண்டும். அதுவே இல்வாழ்க்கையின் ஒழுக்கமாகும் என்கிறார். இல்வாழ்க்கை வாழுகின்றப் பெண்கள் செய்யத்தகாதவைகள் எவை என்பதைக் காரியாசான்,

“கள்ளுண்டல் காணில் கணவன் பிரிந்துரைதல்
வெள்கில ளாய்பிறர் இல்சேறல் - உள்ளிப்
பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளமைத்
திறமதுதீப் பெண்ணின் தொழில்.” [16]

என சிறுபஞ்சமூலம் பாடலில் உரைக்கின்றார். கள்ளுண்டு களித்தல், கணவனைப் பிரிந்து வாழ்தல், பிறர் இல்லத்திற்குச் செல்லுதல், பிறர் கருமத்தை நினைத்துப் பிறருடன் ஆராய்தல், தீய பெண்களோடு இணங்குதல் என்ற இவ்வைந்தும் தீய பெண்களுக்குரிய தீயதொழில் ஆகும். அதனால்

இல்லறத்தாள் இந்த ஐந்து காரியங்களையும் செய்வது தவறாகும் என எடுத்துரைக்கின்றார். இல்லறத்தார் வீடு பேறினைப் பெற முடியும் என்பதை,

> "இல்இயலார் நல்லறமும் ஏனைத் துறவறமும்
> நல்லியலின் நாடி உரைக்குங்கால் - நல்லியல்
> தானத்தால் போகம் தவத்தால் சுவர்க்கமாம்
> ஞானத்தால் வீடாக நாட்டு." [17]

எனும் சிறுபஞ்சமூலம் பாடலில் காரியாசான் விளக்குகின்றார். இல்லறத்தார் இயல்பாகச் செய்யும் நல்ல அறச்செயல்களையும் ஏனைய துறவறத்தார் செய்யும் நல்ல அறச்செயல்களையும், நல்ல நூல்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், நல்ல இயல்புடைய கொடைத் தன்மையால் செல்வ நுகர்ச்சியையும், தவத்தால் சுவர்க்க நுகர்ச்சியையும், மெய்ஞ்ஞானத்தால் வீடு பேற்றினையும் பெறமுடியும் என்கிறார். இல்லற வாழ்வில் வழுவாமல் அறச்செயல்கள் செய்வதால் வீடுபேற்றினை அடைய முடியும் என்பதை வலியுறுத்துகின்றார். இல்லறத்தானின் கடமைகளாக காரியாசான்,

> "நீரறம் நன்று நிழல் நன்று தன்னிலுள்
> பாரறம் நன்றுபாத்து உண்பானேல் - பேரறம்
> நன்று தளிசாலை நாட்டல் பெரும் போகம்
> ஒன்றுமாம் சால வுடன்." [18]

இவைகளை சிறுபஞ்சமூலத்தில் கூறுகின்றார். இல்லறத்தில் வாழ்கின்றவன் தண்ணீர்ப்பந்தல் வைத்தல், நிழல் தரும் மரங்களை வைத்தல், தன் வீட்டில் பிறர் இருக்க இடம் தருதல், பிற உயிர்களுக்குப் பகிர்ந்தளித்துத் தானும் உண்ணுதல், கோவிலையும், மரங்கள் நிறைந்த சாலையையும் அமைத்து அழியாது நிலைபெறச் செய்தல் பெரிய அறமாகும். இவ்வைந்து அறச்செயல்களைச் செய்தவர்களுக்குப் பேரின்பம் உடனே மிகுதியாக

உண்டாகும். இதுவே இல்லறத்தானின் கடமைகள் ஆகும் என்கிறார். இதே போன்று இல்லறப் பெண்களின் கடமைகளாக,

"ஈன்றெடுத்தல் சூல்புறம் செய்தல் குழவியை
ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை - ஆன்ற
அழிந்தாளை இல்வைத்தல் பேரறமா ஆற்ற
மொழிந்தார் முதுநூலார் முன்பு." [19]

இவற்றைக் காரியாசான் சிறுபஞ்சமூலம் பாடலில் விளக்குகின்றார். இல்லறப்பெண்கள் தானீன்ற குழந்தையைத்தானே பாதுகாத்து வளர்த்தல், தான் கொண்ட கருப்பத்தைப் பாதுகாத்தல், வளர்ப்பாரில்லாத குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தல், கர்ப்பவதியையும், மிகவும் அழிந்தவளையும் தன்னுடன் வைத்துப் பாதுகாக்க வேண்டும். இவ்வைந்தையும் செய்தாலே அதுவே பேரறமாகும் என்று இல்லறப்பெண்களின் கடமைகளாக ஆசிரியர் கூறுகின்றார். இல்லற வாழ்வே சிறந்தது என்பதனைக் காரியாசான்,

"புல்லறத்தின் நன்று மனைவாழ்க்கை போற்றுடைத்தே
நல்லறத்தா ரோடு நடக்கலாம் - நல்லறத்தார்க்கு
அட்டிட்டுண்டு ஆற்றவாழ்ந் தார்களே இம்மையில்
அட்டிட்டுண்டு ஆற்றவாழ் வார்." [20]

என உரைக்கின்றார். மனைவியோடு கூடிவாழும் இல்லற வாழ்க்கையானது துறவறத்தை விட மேலானது. இல்லற வாழ்வில் நின்று யாவர்க்கும் பயன்படுமாறு வாழ்வதே நன்மையாகும் என்கிறார். மனைவியோடு சேர்ந்து வாழாத இல்லறம் நல்ல இல்வாழ்க்கை ஆகாது. இதனை,

"தாரம்மா ணாதது வாழ்க்கை யன்று"[21]

என்று மதுரைக் கூடலூர்கிழார் உரைக்கின்றார். இல்லறம் சிறக்க வேண்டுமென்றால் மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும் என்கிறார். இல்லற

வாழ்க்கையானது துறவறத்தைவிட மேலானதாகும் என்பதனைக் கணிமேதாவியார்,

“துறந்தார்கண் துன்னித் துறவார்க்கு இடுதல்
இறந்தார்க்கு இனிய இசைத்தல் - இறந்தார்
மறுதலை சுற்றம் மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே இனிது.” [22]

எனும் ஏலாதிப் பாடலில் உணர்த்துகின்றார். இல்வாழ்க்கையில் இருந்துகொண்டே துறவற ஒழுக்கத்தை மேற்கொள்ளலாம் என்று எடுத்துரைக்கின்றார். இல்லறத்தில் வாழ்கின்றவன் பெருமையும், புகழையும் பெற வேண்டுமென்றால்,

“பொய்யான்பொய் மேவான் புலால்உண்ணான் யாவரையும்
வையான் வழிசீத்து வாலடிசில் - நையாதே
ஈத்துண்பான் ஆகும் இருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பான் ஏத்துண்பான் பாடு” [23]

என்ற இவற்றைச் செய்ய வேண்டும் என கணிமேதாவியார் கூறுகின்றார். பொய் சொல்லாமலும், பிறர் பேசும் பொய்க்கு உடன்படாமலும், ஊனுண்ணாமலும், எவரையும் இகழாமலும், விருந்தினர் வருந்தாமலிருக்க அவர்கள் வரும் வழியைத் துப்புரவு செய்து, உணவை பகிர்ந்துக் கொடுத்து உண்பவன் இல்வாழ்வில் பெருமையும், புகழையும் அடைய முடியும் என்கிறார். இல்வாழ்க்கையில் தன் மனைவி முதலிய சுற்றத்தாரோடு இன்பம் பொருந்தி வாழ வேண்டும் என்பதனைக் கணிமேதாவியார்,

“எள்ளே பருத்தியே எண்ணெய் உடுத்தாடை
வள்ளே துணியே இவற்றொடு - கொள்ளென
அன்புற்று அசனம் கொடுத்தான் துணையினோடு

இன்புற்று வாழ்வான் இயைந்து.” [24]

என ஏலாதிப் பாடலில் உணர்த்துகின்றார். எள், பஞ்சினாலாகிய அரைஞாண், எண்ணெய், உடுத்தும் ஆடை, பணம், போர்வை இவற்றுடன் உணவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கொடுக்கின்றவன் இல்வாழ்க்கை இன்பம் நிறைந்ததாக இருக்கும் என்று எடுத்துரைக்கின்றார். துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே சிறந்தது என்பதை பொய்கையார்,

“அறங்கரை நாவானாம் ஆய்மயிலார் சீரில்

அறங்கரையா நாப்பண் அடைவாம் - புறங்கரையாத்

திண்மை நிலையின் உயர்புலத்தில் சேர்வாம் ஈண்டு

எண்ணிலைக்கு உய்வாய் இது.”[25]

என்று இன்னிலைப் பாடல் மூலம் விளக்குகின்றார். மனைவியுடன் சேர்ந்து வாழுகின்ற இல்லறத்தின் முடிவாகப் பொன்னுலகம் அடைய முடியும் என்கிறார். இல்லற வாழ்வினை இனிது நடத்துதல் வேண்டும். இதனை,

“ஒப்புயர்வில் வேட்டோன் ஒருநிலைப்பட்டு ஆழ்ந்தசெயல்

நப்பின்னை ஞாலம் ஒருங்கறிக - துப்பராய்த்

தூமலரின் மென்மையுறு தோற்றத்தை வைத்துய்க்க

ஏமக் கிழத்தி அறிந்து.” [26]

எனப் பொய்கையார் இன்னிலைப் பாடலில் உணர்த்துகின்றார். கணவன் தமக்குக் காவலாக விளங்கும் மனைவியை நன்கு புரிந்துகொண்டு உள்ளத்தூய்மை உடையவராய் இல்லறத்தில் வாழவேண்டும் எனக் கூறுகின்றார். இல்லற வாழ்க்கைக்கு ஏற்ற பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை,

“ஒத்த உரிமையளா ஊடற்கு இனியளாக்

குற்றம் ஒருஉங் குணத்தளாய்க் கற்றறிஞர்ப்

பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து

நாணும் தகையளாம் பெண்.” [27]

என்றுப் பொய்கையார் கூறுகின்றார். குலம் முதலியவற்றால் ஒத்த உரிமை உடையவள், ஊடல் கொள்வதில் இனிமை உடையவள், குற்றங்களைத் தன்னிடமிருந்து நீக்கிக் குணமுடையவளாய் இருப்பவள், கற்றறிந்த சான்றோரைப் போற்றும் தகைமையுடையவள், கணவன் குறிப்பறிந்து நடப்பவள், நாணமும் இனிய பண்பும் உடையவள், இவ்வியல்புகளை உடையவளே இல்லற வாழ்க்கைக்கு ஏற்ற உயர்ந்து விளங்கும் பெண்ணாவாள் என்கிறார். இதே போன்று இல்வாழ்வானுக்குரிய கடமைகள் எவை என்பதை,

“ஐங்குரவர் ஓம்பல் இனல்நீக்கல் சேர்ந்தோர்க்குப்

பைங்கூழ் களைகணாப் பார்த்தளித்தல் - நையுளத்தார்க்கு

உற்ற பரிவு ஈர்த்தல் எண்ணான்கு அறநெறியில்

உற்ற புரிதல் கடன்.” [28]

எனும் இன்னிலைப் பாடலில் பொய்கையார் உரைக்கின்றார். தாய், தந்தை, குரு, தமையன், அரசன் என்ற ஐந்து குரவர்களையும் பாதுகாத்தல், அவர்களுக்கு உண்டான துன்பங்களை நீக்குதல், தன்னைச் சார்ந்தவர்களுக்கு உணவினை அளித்தல், வருந்துவோர் உள்ளத்திலுள்ள துன்பத்தை நீக்கி அன்பினைக் காட்டி அவர்களைத் தன்பால் மதிப்பு கொள்ளும்படி நடத்தல் ஆகியன இல்வாழ்வானுக்கு உரிய கடமைகளாகும் என எடுத்துரைக்கின்றார். இல்வாழ்வார் வாழ்க்கைகள் அவரவர் வருவாய்ச் செழிப்பை ஒத்தன என்பதனை விளம்பிநாகனார்,

“ஊர்ந்தான் வகைய கலினமா - நேர்ந்தொருவன்

ஆற்றல் வகைய வறஞ்செய்கை தொட்ட

குளத்தனைய தூம்பின் அகலங்கள் தத்தம்

வளத்தனைய வாழ்வார் வழக்கு.”[29]

என எடுத்துரைக்கின்றார். இல்லறத்தானின் அறச்செயல்கள் அவனது வருவாயைப் பொறுத்து அமைவதாகும் என்பதை அறியமுடிகின்றது. இல்லாளோடு சேர்ந்து வாழ்பவனே இன்பமுடையான் என்பதை,

“சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பிச் செல்வத்
திடரின்றி ஏமாந் திருந்தாரே நாளும்
கடலுள் துலாம்பண்ணி னார்.”[30]

எனும் பழமொழிநானூறுப் பாடலில் முன்றுறையரையனார் உணர்த்துகின்றார். தான் கூறுவதற்கு முன்னரே முகம் நோக்கி மனக்குறிப்பினை அறியும் பண்பினை உடைய இல்லாளே விருந்தினர்களுக்கு வேண்டுவன செய்து ஓம்புவாள். அப்படிப்பட்ட இல்லாளோடு செல்வத்துடன் வாழ்பவர்களே நீங்காத இன்பம் உடையவர்கள் என்கின்றார். மனைவி உள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றுபடக் கூடுமாயின் அவனது இல்வாழ்க்கையானது மிகவும் இனிமை உடையதாகும். இதனை,

“உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன்இனிது மாணாதாமாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தான்இனிது நன்கு.”[31]

என்று பூதஞ்சேந்தனார் கூறுகின்றார். இல்லறத்தான் பொருள் உடையவனாக இருந்தாலும், கணவன் மனைவி இருவரும் சேர்ந்து செய்கின்ற ஈகையே சிறப்புடையதாகும் என்பதைச் சுட்டுகின்றார். இதே போன்று நன்னெறியில்,

“காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒரு கருமம் செய்பவே – ஓது கலை

எண்ணிரண்டும் ஒன்றுமதி என் முகத்தாய் நோக்கல்தான்

கண்ணிரண்டும் ஒன்றையே காண்." [32]

என்று சிவப்பிரகாசசுவாமிகள் எடுத்துரைக்கின்றார். இரண்டு கண்களும் இணைந்து ஒரு பொருளைப் பார்ப்பது போல் கணவனும் மனைவியும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் நற்காரியத்தைச் செய்வார்கள் என்கிறார். இக்கருத்தைப் போன்றே,

"மருவிய காதல் மனையாளும் தானும்

இருவரும் பூண்டுய்ப்பின் அல்லால் - ஒருவரால்

இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்

செல்லாது தெற்றிற்று நின்று"[33]

எனும் அறநெறிச்சாரப் பாடல் விளக்குகின்றது. ஒத்த அன்பினை உடைய கணவனும் மனைவியும் சேர்ந்து இல்வாழ்க்கையாகிய அழகிய வண்டியை செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாமல் கணவன் மனைவி இருவருள் ஒருவர் மட்டும் இல்லறத்தை நடத்தினால் அவ்வண்டி செல்லாமல் தடைப்பட்டு நின்றுவிடும் என்பதை உணர்த்துகின்றது. நல்ல மனைவியோடு சேர்ந்து வாழ வேண்டும் என்பதை,

"மெல்லினல்லாள் தோள் சேர்"[34]

என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். நற்குணங்கள் உள்ள மனைவியோடு சேர்ந்து வாழும் இல்லற வாழ்க்கையே சிறப்படையும் என்று அறிவுறுத்துகின்றார். இக்கருத்தைப் போன்றே கொன்றை வேந்தனில் ஔவையார்,

"இல் அறம் அல்லது நல் அறம் அன்று"[35]

என உரைக்கின்றார். மனைவியுடன் கூடி வாழ்வதே நல்வாழ்வு, அப்படி இல்லாவிடில் அது நல்ல அற வாழ்க்கை ஆகாது என்கிறார். இல்லறத்தான் செய்யக் கூடாத செயல்கள் எவை என்பதனை,

"பிறன்மனை புகாமை அறம் எனத் தகும்"[36]

எனும் கொன்றைவேந்தன் பாடலில் ஔவையார் விளக்குகின்றார். பிறர் மனைவி மீது ஆசை கொண்டு அங்கே செல்லாமல் இருப்பதே சிறந்த நெறியாகும் எனச் சுட்டுகின்றார். மனைவி இல்லாதவருக்கு ஒரு இன்பமும் இல்லை என்பதை,

"நல்ல ஞாலமும் வானமும் பெறினும்

எல்லாம் இல்லை இல் இல்லோர்க்கே" [37]

என்று அதிவீரராமபாண்டியன் எடுத்துரைக்கின்றார். இந்த உலகமே கிடைத்தாலும் மனைவி இல்லாதவருக்கு எந்த இன்பங்களுமே உண்டாவது இல்லை என்பதை அறிவுறுத்துகின்றார். கணவன் மனைவி இருவருமே சேர்ந்து வாழ்ந்தால் மட்டுமே உலக இன்பத்தை அடைய முடியும் என்பதை அறியமுடிகின்றது. தன் மனைவியை வீட்டிலே வைத்து விட்டு, பிறருடைய மனைவி மீது ஆசை கொண்டு பிறருடைய வீட்டுக்குச் செல்லும் அறிவிலியும் பதராவார். இதனை,

"தன் மனையாளைத் தனி மனை இருத்திப்

பிறர் மனைக்கு ஏகும் பேதையும் பதரே'[38]

எனும் வெற்றிவேற்கைப் பாடலில் அதிவீரராமபாண்டியன் விளக்குகின்றார். தன்னுடைய மனைவியுடன் வாழுகின்றவனே சிறந்த மனிதன் என்று உணர்த்துகின்றார். நல்ல மனைவி அமைந்தவருக்கு இன்பம் உண்டாகும் என்பதனை ஔவையார்,

"இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை

இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்

வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ் இல்

புலி கிடந்த தூறாய் விடும்."[39]

என்ற முதுரைப் பாடல் மூலம் சுட்டுகின்றார். ஒரு இல்லத்துக்கு நல்ல குணமுள்ள மனைவி அமைந்து விட்டால் அங்கே எந்தக் குறையும் இருக்காது. கொடுமையான குணமுள்ளவள் ஒரு இல்லத்தில் இருந்தால் புலிக் குகைப்போல் இருக்கும் அந்த இல்லம் என்கிறார். அதனால் பெண்கள் நற்குணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை அறிய முடிகின்றது. இல்லறத்தில் மனைவியின் சிறப்பைப் பற்றி ஔவையார்,

"நீறு இல்லா நெற்றி பாழ் நெய் இல்லா உண்டிபாழ்

ஆறு இல்லாத ஊருக்கு அழகுபாழ் - மாறில்

உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ் பாழே

மடக் கொடி இல்லா மனை"[40]

என நல்வழிப் பாடலில் விளக்குகின்றார். திருநீா் அணியாத நெற்றியும், நெய்யில்லாத உணவும், நதியில்லாத ஊரும், உடன் பிறப்பு இல்லாத பிறப்பும் எவ்வாறு சிறப்படையாமல் இருக்குமோ அதுபோல் மனைவி இல்லாத வீடு சிறப்படையாது என்கிறார். நல்ல மனைவியுடன் கூடி இல்லறத்தை நடத்த வேண்டும் என்பதை,

"உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்

பற்றிமிக வாழ்க பசுவின்வால் - பற்றி

நதிகடத்த லன்றியே நாயின்வால் பற்றி

நதிகடத்த லுண்டோ நவில்"[41]

என்று நீதிவெண்பாப் பாடல் உணர்த்துகின்றது. பசுமாட்டின் வாலை பிடித்துக் கொண்டு நீர் நிரம்பிய ஆற்று வெள்ளத்தைக் கடப்பதல்லாமல், ஒரு சிறு நாயின் வாலைபிடித்துக்கொண்டு ஆற்றைக் கடந்து செல்ல முடியாது. அதுபோல நல்லமனைவியுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கைதான் இன்பத்தைத் தரும் என்கிறது. மனைவி இறந்துவிட்டால் உணவு, கல்வி, வெற்றி என்ற அனைத்தும் கெட்டுவிடும். இதனை,

"மாதா மரிக்கின் மகனாவி னற்சுவைபோம்

தாதா வெனிற்கல்வி தானகலும் - ஓதினுடன்

வந்தோன் மரித்துவிடில் வாகுவலி போமனையேல்

அந்தோ விவையாவும் போம்"[42]

எனும் நீதிவெண்பாப் பாடல் வழி அறியமுடிகிறது. மனைவி ஒரு குடும்பத்தில் பல துறைகளையும் ஏற்றுப் பொறுப்புடன் செயலாற்றுபவள் அதனால் அவள் இறந்துவிட்டால் அவளோடு அனைத்தும் போய்விடும் என்கிறது. இல்லறத்தில் மனைவியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறியமுடிகின்றது. இல்வாழ்க்கைக்குரிய இயல்புகள் எவை என்பதனை,

" பிச்சையும் ஐயமும் இட்டுப் பிறன்றாரம்

நிச்சலும் நோக்காது பொய்யொரீஇ- நிச்சலுங்

கொல்லாமை காத்துக் கொடுத்துண்டு வாழ்வதே

இல்வாழ்க்கை என்னும் இயல்பு"[43]

என்று அறநெறிச்சாரப் பாடல் உணர்த்துகின்றது. இரந்தாருக்கும், துறந்தாருக்கும் கொடுத்தும், பிறர் மனைவியை விரும்பாமலும்,பொய் பேசாமலும், கொலைத் தொழில் செய்யாமலும், விருந்தினரை உண்பித்து தாமும் உண்டு வாழ்தலே இல்வாழ்க்கைக்குரிய இயல்புகள் என்று

அறிவுறுத்துகின்றது. கணவனும் மனைவியும் என்றும் இணைபிரியாத அன்புடையவர்களாக வாழ்ந்தால் தான் இல்லறம் சிறக்கும். இதனை,

"அரும்பொருள் வேட்கைய மாகிநிற் றுறந்து
பெருங்க லதரிடைப் பிரிந்த காலைத்
தவநனி நெடிய வாயின வினியே
யணியிழை யுள்ளியாம் வருதலி
னணிய வாயின சுரத்திடை யாறே"[44]

எனும் ஐங்குறுநூறுப் பாடல் விளக்குகின்றது. சிறந்த செல்வப் பொருளைத் தேடுவதிலே ஆவல் கொண்டு உன்னைத் துறந்து மலைப் பாதைகளிலே பிரிந்து சென்றேன். சென்றபோது அவ்வழிகள் நீண்ட வழிகளாக இருந்தன. அதன்பின் அழகிய ஆபரணங்களை உடைய உன்னை நினைத்துக்கொண்டு நான் திரும்பி வந்தேன். திரும்பி வரும்போது பாலை நிலத்திலே உள்ள அவ்வழிகள் மிகவும் பக்கமாக இருந்தன என்று பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்பிய பின் தலைவியிடம் தன் அன்பை வெளிப்படுத்துகிறான். இப்பாடல் கணவன் தன் மனைவியிடம் கொண்டிருந்த அன்பை விளக்கிக் காட்டுகிறது. இக்கருத்தைப் போன்றே குறுந்தொகையிலும்,

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்என
நமக்குஉரைத் தோரும் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே"[45]

என்றப் பாடல் உணர்த்துகின்றது. தொழில் செய்து பொருளீட்டும் கணவனுக்கு, மனைவிதான் வாழ்க்கையிலே உற்சாகமூட்டும் உயிர். இதைப்போலவே

இல்லத்திலே இருந்து கடமையைச் செய்யும் மனைவிக்கு, கணவனே இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தரும் உயிர். நமது காதலர்தான் இவ்வுண்மையை நமக்கு உரைத்தார். ஆதலால் தோழியே நீ வருந்தாதே அவர் இப்பொழுது பிரிந்து செல்லமாட்டார். அவராகவே தம் பயணத்தை நிறுத்தி விடுவார் எனத் தோழி தலைவிக்கு சமாதானம் சொல்கிறாள். இல்லறத்தில் உள்ள தம்பதிகள் ஒருமனப்பட்டு வாழ்ந்தனர் என்பதற்கு இப்பாடல் சான்றாக அமைகிறது.

இல்வாழ்க்கையத் திறமையுடன் நடத்த வேண்டிய முறைப்படி நடத்தினால் அதைக் காட்டிலும் இனிய வாழ்வு வேறு இல்லை என்பதை,

“மனைஉறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவின் இனியவும் உளவோ”[46]

எனும் குறுந்தொகைப் பாடலின் மூலம் அறிந்துகொள்ளலாம். இல்லறம் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்தவர்களாக வாழவேண்டும். இவர்கள்தான் இல்லறத்திலே இன்பங்களை காண்பர் என்பதை அறியமுடிகின்றது. இல்லறப் பெண்கள் தம் வீட்டுக் குறைகளைப் பிறர் அறிவதற்கு இடங்கொடுக்கமாட்டார்கள். வறுமையால் எவ்வளவுதான் வாடி வதங்கினாலும் குடும்பப் பெருமையை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். உள்ளதைக் கொண்டு மகிழ்ச்சியடைவார்கள் என்பதனை நற்றிணை,

“அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்”[47]

என்றப் பாடலில் விளக்குகின்றது. அவர்கள் குடும்பம் வறுமை அடைந்ததைக் கண்டு அவர்களுடைய தந்தையர் அன்புடன் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்தால் அவைகளைக் கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது சிறந்த அறிவும் ஒழுக்கமும் நிறைந்த இல்லறப் பெண்களின் குணமாகும் எனச் சுட்டிக்காட்டுகின்றது.

**மக்கட்பேறு**

மானிடப் பிறவி என்பது மிகவும் அபூர்வமானது. பிள்ளைப் பேறு என்பது மிகப் பெரிதாகப் பேணப்பட்டது. இல்லறத்தில் வாழ்வோர்க்குப் பிள்ளைப்பேறு ஒரு சிறந்த செல்வமாகக் கருதப்பட்டது. குழந்தை இல்லாத வீடு பொலிவிழந்து காணப்படும். குடும்ப மரத்தின் கனி குழந்தையே, மாசற்ற மனமும் மலர் போன்ற முகமும் கொண்ட குழந்தை மழலை பேசியும் சிரித்தும் பெற்றோரை மகிழ்விக்கிறது. அவர்களது துன்பத்தைப் போக்குகிறது. ஆகவே இல்வாழ்வார்க்குச் சிறந்தது மக்கட்பேறே எனலாம். மக்கட்பேரின் சிறப்புப் பற்றி வள்ளுவர்,

“பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற”[48]

என்று குறளின் வழி விளக்குகின்றார். பெறத் தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர மற்றப் பேறுகளை நான் மதிப்பதில்லை என்கிறார். எல்லா சிறப்புகளையும் விட நல்ல மக்களைப் பெறுவதே மிக உயர்ந்த சிறப்பு என்பதை அறியமுடிகிறது. பெற்றோருக்கு அமிழ்தத்தைவிட மிகவும் இனிமையான உணவு எது என்பதை,

“அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்

சிறுகை அளாவிய கூழ்"[49]

எனும் குறட்பாவில் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு அமிழ்தத்தைவிட இனிமையானது என்று சுட்டிக்காட்டுகின்றார். குழந்தைகளின் மழலைச் சொல்லைப் பற்றி,

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்"[50]

என்று வள்ளுவர் கூறுகின்றார். தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது, யாழின் இசை இனியது என்று கூறுவர் என்கிறார். குழந்தையின் பேச்சு மிகவும் இனிமை உடையதாகும் என்பதை உணர்த்துகின்றார். தந்தையின் தளர்ச்சியைக் காத்தற்கு மைந்தன் முயற்சி உடையவனாக இருத்தல் வேண்டும். இதனை,

"சிதலை தினப்பட்ட ஆலமரத்தை

மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்

குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற

புதல்வன் மறைப்பக் கெடும்" [51]

எனும் நாலடியார் பாடல் விளக்குகின்றது. கறையானால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் தாங்கி நிற்பதுபோல் தன் தந்தையை துன்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் என்கிறது. இது மகனின் கடமையாகும் எனச்சுட்டிக்காட்டுகின்றது. புதல்வனின் அறிவு அவன் தந்தையின் அறிவை ஒத்ததாகும் என்பதனை நாலடியார்,

"செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்

செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்

வயனிறையக் காய்க்கும் வளவய லூர

மகனறிவு தந்தை யறிவு"[52]

என்றப் பாடலின் வழி உணர்த்துகின்றார். புதல்வனுடைய அறிவு ஒழுக்கங்களை விரும்பும் தந்தை தான் நல்லறிவு நல்லொழுக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும். தந்தையின் அறிவைப் பொறுத்தே மகனின் அறிவு இருக்கும் என்று கூறுகின்றது. மக்கட்பேறு சிறந்தது என்பதை,

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்

மக்கட் பேற்றில் பெறும்பே றில்லை"[53]

என்ற முதுமொழிக்காஞ்சிப் பாடலில் மதுரைக்கூடலூர்கிழார் உரைக்கின்றார். கடல் சூழ்ந்த இவ்வுலக மக்கள் எல்லார்க்கும் மக்கட்பேற்றைவிட அடையத்தக்க சிறந்தப் பேறு வேறில்லை. எனவே மக்கட்பேறே சிறந்தப் பேறு என்று கூறுகின்றார். புதல்வர்கள் பன்னிரெண்டு வகைப்படுவார்கள் என்பதைக் கணிமேதாவியார்,

"மாண்டவர் மாண்ட அறிவினான் மக்களைப்

பூண்டவர்ப் போற்றிப் புரக்குங்கால் - பூண்ட

ஔரதனே கேத்திரசன் கானீனன் கூடன்

கிரிதன்பென ஏற்பவன் பேர்"[54]

எனும் பாடலின் மூலமும்,

“மத்த மயிலன்ன சாயலாய் மன்னியசீர்த்
தத்தன் சகோடன் கிருத்திரமன் -புத்திரி
புத்ரன்அப வித்தனொடு பொய்யில் உபகிருதன்
இத்திறத்த வெஞ்சினார் பேர்”[55]

எனும் பாடலின் மூலமும் விளக்குகின்றார். புத்திரர்களின் பெயர்களைப் பின்வருமாறுக் கூறுகின்றார்.

1. ஔரதன் - கணவனுக்குப் பிறந்தவன்
2. கேத்திரசன் - கணவனிருக்கையில் பிறனுக்குப் பிறந்தவன்
3. கானீனன் - திருமணமாகாதவட்குப் பிறந்தவன்
4. கூடன் - கணவனுக்குத் தெரியாமல் பிறனுக்குப் பிறந்தவன்.
5. கிரீதன் - விலைக்கு வாங்கப்பட்டவன்
6. பௌநற்பவன் - கணவன் இறந்தப் பின்னர் மறு மணம் செய்துகொண்டு பெற்ற மகன்.
7. தத்தன் - ஒருவருக்கு விதிமுறையில் கொடுக்கப்பட்டவன் (சுவீகாரப் புத்திரன்)
8. சகோடன் - திருமணத்தின்போதே கருவிருந்துபின் பிறந்தவன்
9. கிருத்திரமன் - கண்டெடுத்து வளர்க்கப்பட்டவன்.
10. புத்திரிபுத்ரன் - மகளுக்குப் பிறந்தவன் (தௌத்திரன்)

11. அபவித்தன் - பெற்றோர்களால் காப்பாற்ற முடியாமல் விடப்பட்டு மற்றொருவனால் வளர்க்கப்பட்டவன்.

12. உபகிருதன் - காணிக்கை போல வந்து சேர்ந்தவன்.

என்று புதல்வர்களை வகைப்படுத்திக் கூறியுள்ளதை அறியமுடிகிறது. மக்கட் பேற்றின் இன்பத்தை கண்கூடாகக் காண முடியும். இதனை,

“பாலை வளர்த்துக் கணங்குழை மாலையுறல்
சால்பென்ப கண்கூடாக் காணாய் - தழைகாதல்
வாலறிவன் ஆக்க வகையறிக காலத்தால்
தோலொடு நாலைந்து அணைந்து”[56]

என்ற இன்னிலைப் பாடலில் பொய்கையார் எடுத்துரைக்கின்றார். பாலகனைப் பெற்று வளர்த்து மிகுந்த ஆசையுடன், அழகுடன் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கூடிய அக்காலத்தில் பள்ளியில் சேர்த்து அறிவுடையவனாக ஆக்குவதற்குரிய வழிவகையைக் கண்டு அறிந்து செய்தால் அதனால் வருகின்ற இன்பத்தை அடைய முடியும் என்கிறார். பெற்றோர்க்கு மக்களைப்போல ஒளியுள்ளப் பொருள்கள் வேறு இல்லை என்பதனை விளம்பிநாகனார்,

“கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோ
டெண்ணக் கடவுளு மில்”[57]

எனும் நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் விளக்குகின்றார். ஒருவனுக்குக் கண்ணைப்போல மேலான உறுப்பு வேறில்லை. குலமக்களுக்குக் கணவனைப்போல நெருங்கிய உறவினர் வேறில்லை. அதுபோல் பெற்றோர்களுக்கு தம் மக்களைப் போல வேறு செல்வங்கள் எதுவும் இல்லை. அப்படிப்பட்ட மக்கட் செல்வத்துக்குத் தாயைப்போல மேலான கடவுள் வேறு எதுவுமில்லை என்கிறார். இக்கருத்தைப் போன்றே கொன்றைவேந்தனில் ஒளவையார்,

"தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"[58]

என்றும்,

"தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை"[59]

என்றும் உணர்த்துகின்றார். தந்தையின் அறிவுரைக்கு மேலான வேதம் இல்லை. பெற்றத் தாயைவிட வணங்குவதற்குச் சிறப்பான கோயில் வேறு ஒன்றும் இல்லை என்பதைச் சுட்டுகின்றார். பெற்றோருக்கு இம்மை, மறுமைப் பயன்களை தருவதாய், பிறவி முழுவதும் உரியதாய் அமைந்து நிற்கும் உறவு என்பது தம் மக்களே என்பதை வள்ளுவர்,

" தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்" [60]

எனும் குறளின் மூலம் விளக்குகின்றார். தம் மக்களே தம்முடைய சொந்தப் பொருள்களாகும். அவரவருடைய வினையின் பயனாலேயே மக்கட்பேறு கிடைக்கும் என்கிறார். தந்தையின் கடமை பற்றி முன்றுறையரையனார்,

"எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச்

செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும் - அந்நெறி

மான்சேர்ந்த நோக்கினாய் ஆங்க வணங்காகும்

தான்செய்த பாவை தனக்கு"[61]

என்று பழமொழிநானூறுப் பாடலில் எடுத்துரைக்கின்றார். தம்முடைய மக்களுக்கு கல்வி அறிவு ஊட்டுதல் தந்தையின் கடமையாகும். அது தானே உருவாக்கிய தெய்வத்திற்குச் சமமாகும் என்பதை உணர்த்துகின்றார். தன் மக்களை சான்றோனாக்குதல் தந்தையின் கடமையாகும் என்பதை அறியமுடிகிறது. கல்வி கற்றவனையே தாயானவள் விரும்புவாள் என்பதை,

"ஒக்கும் வகையான் உடன்பொரும் சூதின்கண்

பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்

மிக்க சிறப்பின ராயினும் தாயர்க்கு

மக்களுள் பக்கமோ வேறு"[62]

எனும் பழமொழிநானூறுப் பாடலில் முன்றுறையரையனார் உணர்த்துகின்றார். தம் மக்களுள் கல்வியில் சிறந்தவனையே தாயானவள் மிகவும் விரும்பி வரவேற்பாள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். பெற்றோருக்கு குழந்தைகளினால் ஏற்படும் இனிமை பற்றி பூதஞ்சேந்தனார்,

"குழவி தளர்நடை காண்டல் இனிதே

அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே

வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து

மனனஞ்சான் ஆகல் இனிது"[63]

என்று இனியவைநாற்பதுப் பாடலின் மூலம் விளக்குகின்றார். குழந்தைகளது தளர்நடையும்,அவர்களதுமழலைச் சொற்களும் பெற்றோர்களுக்கு தேவாமிர்தத்தைவிட மிகவும் இனிமை உடையதாகும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே புறநானூறிலும்,

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும், தொட்டும், கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே"[64]

எனும் பாடல் உணர்த்துகின்றது. குறுக குறுக நடந்து சென்று சிறிய கையை நீட்டிக் கலத்தின்கண் கிடந்ததனைத் தரையிலே இட்டும் பிசைந்தும், வாயாற் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யை உடைய சோற்றை உடம்பின்கண் படச் சிதறியும் உண்ணுகின்ற குழந்தையினால் பெரும் இன்பம் மிகவும் உயர்ந்த இன்பமாகும் என எடுத்துரைக்கின்றது. புதல்வர்களுக்கு முதன்மையான தெய்வங்கள் பெற்றோர் என்பதை ஔவையார்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"[65]

என்றக் கொன்றைவேந்தன் பாடலில் எடுத்தியம்புகின்றார். தாயும், தந்தையும், நம் கண் முன்னே காணப்படும் தெய்வங்களாவார்கள். அப்படிப்பட்ட கண்கண்ட தெய்வங்களையே நாம் முதலில் வணங்க வேண்டும் என்கிறார்.

பெற்றோரின் குறிப்பறிந்து செய்கின்ற மக்களை ஔவையார்,

"ஏவா மக்கள் மூவா மருந்து"[66]

எனக் குறிப்பிடுகின்றார். தாய் தந்தை செய் என்று சொல்லும் முன்னே அவர்களது குறிப்பறிந்து செய்யும் பிள்ளைகள் அமுதம் போன்றவர்கள் என்று அறிவுரை கூறுகின்றார். குலம் தழைக்க வேண்டும் என்றால் குழந்தைப் பேறுடன் வாழ வேண்டும் என்பதை,

"சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை"[67]

என்றும், தன்னுடைய பிள்ளைகளைச் சான்றோர் என்று உலகத்தார் போற்றுவதே தாய்க்கு அழகாகும் என்பதை,

"சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு"[68]

என்றும் ஔவையார் கொன்றைவேந்தனில் எடுத்துரைக்கின்றார். தாயானவள் குழந்தை பெற்றவுடனும், அந்த குழந்தை கல்வி அறிவில் சிறந்து விளங்கி மற்றவர்களால் சான்றோன் என்று புகழ்வதாலும் மகிழ்ச்சி அடைகிறாள் என்பதை அறிய முடிகின்றது. ஒருவர் பெற்ற எல்லாப் பிள்ளைகளும் பிள்ளைகள் என்ற நற்பெயர் எடுக்கமாட்டார்கள் இதனை,

"பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்"[69]

என அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கையில் கூறுகின்றார். கல்வியில் சிறந்தும், ஒழுக்கம் உடையவனாக இருப்பவனே நல்ல பிள்ளை என்று சிறப்பித்துப் பேசப்படுவான் என்பதை எடுத்துரைக்கின்றார். மக்கட்பேறு உடையானுடைய சிறப்பு என்பது,

"கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு – மக்கட்பே

றென்பதோ ராக்கமும் உண்டாயின் இல்லன்றே

கொண்டாற்குச் செய்தவம் வேறு"[70]

என்றுக் குமரகுருபரர் நீதிநெறிவிளக்கப் பாடலில் விளக்குகின்றார் கற்பு, அன்பு, நாணம், நற்குண நற்செய்கை, மக்கட்பேறு முதலிய மேன்மைகளை உடைய மனையாளொடு வாழும் வாழ்க்கையே தவ வாழ்க்கையை போன்றதாகும் என்கிறார்.

சிறந்த அறிவினை உடைய மக்களைப் பெற்றெடுத்த நல்லோர்கள் இவ்வுலகத்திலும் புகழுடன் வாழ்வார்கள். குற்றமில்லாமல் மறுவுலக இன்பத்தையும் அடைவார்கள். இவ்வாறு பலரும் கூறிய பழைய வார்த்தைகள் எல்லாம் உண்மையாக இருப்பதைக் காணும் வாய்பைப் பெற்றோம் என்பதை,

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி

மறுமை யுலகமும் மறுவின் றெய்துப

செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்,

வாயே யாகுதல் வாய்த்தனம்"[71]

என்று அகநானூறுப் பாடல் உணர்த்துகின்றது. மக்களைப் பெற்றவர்களுக்கு மட்டுமே புண்ணிய உலகம் கிடைக்கும். பிள்ளைகள் இல்லாதவர்களுக்குப் புண்ணிய உலகம் இல்லை என்பதை உணர்த்துகின்றது. நன்மக்களைப் பெற்றவர்களுக்கே புண்ணிய உலக இன்பம் கிடைக்கும் என்பதை அறியமுடிகின்றது. இக்கருத்தைப் போன்றே வள்ளுவரும்,

“எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கள் பெறின்”[72]

என்றக் குறளின் வழி உரைக்கின்றார். பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் துன்பங்கள் வராது எனக் கூறுகின்றார். பண்பு நிறைந்த மக்களைப் பெற்றவர்கள் இன்பம் அடைவார்கள் என எடுத்துரைக்கின்றார்.இதே போன்று,

“ தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து

மன்னுயிர்க்கு எல்லாம் இனிது”[73]

எனும் குறளில் வள்ளுவர் விளக்குகின்றார். தம் மக்களின் அறிவுடைமை தமக்கு இன்பம் தருவதைவிட உலகத்து உயிர்களுக்கெல்லாம் மிகுந்த இன்பத்தைத் தரும் என்கிறார்.

## நட்பு

நண்பருக்கு உதவி செய்தல் தன் கடமை என்று நினைக்கின்றவர்களுடன் ஏற்படும் நட்புதான் இடையிலே அறுந்து போகாது. என்றும் பிணைந்து நிற்கும். நண்பர் இருவரும் இத்தகைய எண்ணம் உடையவர்களாக இருந்தால் அவர்களுடைய நட்புக்கும் எப்பொழுதும் முடிவே இல்லை. தந்நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நண்பராக நடிப்பவர்கள் உண்மையான நண்பர்கள் ஆகமாட்டார்கள். அவர்கள் தங்களுக்கு நன்மை கிடைக்கும் வரையிலுந்தான் நண்பர்களாக நடிப்பார்கள்.தந்நலம் நிறைவேறாத போது நட்பைக் கைவிடுவர். இத்தகையவர்களுடன் நட்பு கொள்ளுதல் கூடாது. நட்பின் தன்மை பற்றி வள்ளுவர்,

“நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு"[74]

எனக் கூறுகின்றார். நூலின் நற்பொருள் கற்கக்கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போல் நற்பண்பு உடையவரின் நட்பு பழகப் பழக இன்பம் தரும் என்பதை எடுத்துரைக்கின்றார். நட்பு செய்வதற்கு,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்புஆம் கிழமை தரும்" [75]

என வள்ளுவர் எடுத்தியம்புகின்றார். நட்புச் செய்வதற்குத் தொடர்பும், பழக்கமும் வேண்டியதில்லை. ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும் என்று விளக்குகின்றார். இதே போன்று வள்ளுவர்,

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகம்நக நட்பது நட்பு" [76]

எனவும் எடுத்துரைக்கின்றார். முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும் என்கிறார். நட்பின் சிறப்புப் பற்றி வள்ளுவர்,

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதுஆம் நட்பு" [77]

எனும் குறள்வழி உணர்த்துகின்றார். உடை நெகிழ்ந்தவனுடைய கை உடனே உதவிக் காப்பதுபோல் நண்பனுக்குத் துன்பம் வந்தால் அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவதே சிறந்த நட்பாகும் எனச் சுட்டிக்காட்டுகின்றார். இதே போன்று நாலடியாரில்,

“முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனேல் - நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வையம் நக”.[78]

எனும் பாடல் உரைக்கின்றது. நண்பனுக்கு துன்பம் உண்டான காலத்தில் தன்னுடைய உயிரையும் கொடுத்து பாதுகாக்க வேண்டும். அப்படி துன்பம் வந்த காலத்தில் உதவுகின்றவனே சிறந்த நண்பனாவான் என்பதை எடுத்துரைக்கின்றது. கல்வி கற்றவர்களின் நட்பானது மேன்மேலும் இன்பம் தருவதாகும் என்பதனை நாலடியார்,

“கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே – குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுர மிலாளர் தொடர்பு”[79]

என்றப் பாடலின் வழி விளக்குகின்றது. கற்றவர்களின் நட்பானது கரும்பைக் குருத்திலிருந்து தின்றாற் போன்றதாகும். கல்வி அறிவு இல்லாதவர்களின் நட்பானது கரும்பை அடிப்பாகத்திலிருந்து தின்றாற் போன்றதாகும். அதனால் சிறந்தோரின் நட்பை மட்டுமே வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கிறது. குருத்திலிருந்து கரும்பு தின்னுதல் மேன்மேலும் இன்பம்தந்து செல்லுவதற்கும், அடியிலிருந்து கரும்பு தின்னுதல் வரவர இன்பம் குறைந்து செல்லுவதற்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. நட்பு செய்வதற்கு தகுதியற்றவர்கள் பற்றி நல்லாதனார்,

“பொய்வழங்கி வாழும் பொறியறையும் கைதிரிந்து

தாழ்விடத்து நேர்கருதும் தட்டையும் - ஊழினால்

ஒட்டி வினை நலம் பார்ப்பானும் இம்மூவர்

நட்கப் படாஅ தவர்”[80]

எனும் திரிகடுகப் பாடலில் உணர்த்துகின்றார். பொய்யான சொற்களைப் பேசி அதனால் உயிர்வாழ்கின்ற அறிவற்றவனும், முறைமை மாறி ஒருவன் தாழ்ந்த இடத்து தன்னை உயர்ந்தவனாகக் கருதும் மனத்தை உடையவனும், பிறரிடம் சேர்ந்து வேலை பார்க்கும்போது தனக்குரிய பயனையே எதிர்பார்த்து செயல் செய்கின்றவனும் ஆகிய இம்மூவருடனும் நட்புக் கொள்ளக் கூடாது என்கிறார். இவர்கள் நட்பு செய்வதற்குத் தகுதியற்றவர்கள் எனக் கூறுகின்றார். நட்பு செய்வதற்குரியவர்கள் பற்றி,

“ சான்றாருள் சான்றான் எனப்படுதல் எஞ்ஞான்றும்

தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல் - பாய்தெழுந்து

கொள்ளாருள் கொள்ளாத கூறாமை இம்மூன்றும்

நல்லான் வழங்கும் நெறி” [81]

என நல்லாதனார் கூறுகின்றார். நல்லாருள் நல்லார் எனப்படுதலும், செல்வம் உள்ள காலத்தும், செல்வம் இல்லாத காலத்தும் நட்பு கொண்டவரோடு நட்பு கொண்டிருத்தல் வேண்டும் என எடுத்துரைக்கின்றார். உயர்ந்த நட்பு என்பது,

“சோரா நல்நட்பு உதவியின் அறிப”[82]

என்று மதுரைக்கூடலூர்கிழார் முதுமொழிக்காஞ்சிப் பாடலில் உணர்த்துகின்றார். உயர்ந்த நட்புடைமையானது உதவி செய்யும் இயல்பினால் அறிந்து கொள்ளலாம் என்கின்றார். இதே போன்று நட்பைப் பற்றி,

"கொண்டுகண் மாறல் கொடுமையின் துவ்வாது"[83]

"ஈரம்இல் லாதது கிளைநட் பன்று"[84]

"நேரா நெஞ்சத்தோன் நட்டோன் அல்லன்"[85]

எனும் முதுமொழிக்காஞ்சிப் பாடலில் மதுரைக் கூடலூர் கிழார் உரைக்கின்றார். நண்பனிடம் அன்பு செய்யாமை இருப்பது கொடுமை செய்தது போன்றதாகும். அன்பில்லாத தொடர்பு உறவுமாகாது, நட்புமாகாது ஒற்றுமைப்படாத நெஞ்சத்தை உடையவன் உற்ற நண்பனாக மாட்டான் எனக் கூறுகின்றார். அன்புடனும், உள்ள ஒற்றுமையுடனும் இருப்பவனே நல்ல நண்பனாவான் என்பதை அறியமுடிகிறது. நல்லவர்களையே நட்பாக்கிக் கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால் அவர்களால் துன்பம் வந்து சேரும் என்பதை,

"செற்றுடன் உறைவானைச் சேர்தல்நல் கூர்ந்தன்று"[86]

"நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந் தன்று"[87]

என்றும் மதுரைக்கூடலூர்கிழார் விளக்குகின்றார். உட்பகை கொண்டு வாழ்கின்றவனை நண்பராகக் கொண்டு வாழ்தல் வறுமை உடையதாகும். நட்பு இயல்பு இல்லாதவிடத்து ஒரு உதவியை நாடிப் போதல் வறுமை உண்டாகும் என்கிறார். நட்பின் இயல்பாவது பிறர்க்கு உதவுதல். அது இல்லாதார் மாட்டு உதவி கேட்டலில் எந்தவிதப் பயனும் இல்லை என்பதை எடுத்துரைக்கின்றார். நண்பராக்கிக் கொள்ள வேண்டியவர்கள்,

" உடன்படான் கொல்லான் உடன்றார்நோய் தீர்ந்து
மடம்படான் மாண்டார்நூல் மாண்ட - இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேல் மற்றவனை
ஆக்குவர் ஆக்கும் அணைந்து"[88]

என்று கணிமேதாவியார் ஏலாதிப் பாடலில் உரைக்கின்றார். பிறரை கொல்லுதற்கு உடன்படாமலும், தானும் ஒருயிரைக் கொல்லாமலும், நோய் வாய்ப்பட்டு வருந்துகின்றவர்களின் நோயைப் போக்க உதவி செய்தும், அறியாமையின் கண் மயங்காமலும், பெருமை மிக்க சான்றோர்களின் நூல்களிலுள்ள சிறந்த கருத்துக்கள் தனக்குப் பொருந்தும் படியாக வாழ்ந்தும், ஆக இத்தகைய ஆறு பண்புகளை உடையவரை நண்பராக்கிக் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார். நற்பண்பு நிறைந்தவர்களை நண்பராக்கிக் கொள்ள வேண்டும் என்பதை அறியமுடிகின்றது. உள்ளன்புடைய நண்பர்களின் செயல்கள் பற்றி கணிமேதாவியார்,

“சாதல் பொருள் கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே – ஓதலின்
அன்புடையார்க்கு உள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து”[89]

எனக் கூறுகின்றார். நண்பர்கள் இறந்து விட்டால் தாமும் பிரிவாற்றாமல் இறத்தலும், அவர்களுக்கு வறுமை வந்தபோது பொருள் கொடுத்து உதவி செய்தலும், இன்சொல் கூறுதலும், அவர்களுடன் கூடியிருத்தலை விரும்புதலும், அவர்கள் வருந்தும் போது தாமும் வருந்துதலும், அவர்கள் பிரியுங்காலத்து உள்ளம் கலங்குதலும் என இந்த ஆறு குணங்களும் மெய்யன்பு உடைய உண்மையான நண்பர்களுக்கு இருக்கின்ற குணங்கள் என விளக்குகின்றார். அன்போடு பழகுகின்ற நட்பு மட்டுமே என்றும் நிலைத்து நிற்கக் கூடியது எனச் சுட்டுகின்றார். இக்கருத்தைப் போன்றே,

"சாக்காடு கேடு பகைதுன்பம் இன்பமே

நாக்காடு நாட்டறை போக்குமென – நாக்காட்ட

நட்டார்க்கு இயையில் தமக்கியைந்த கூறுடம்

பட்டார்வாய்ப் பட்டது பண்பு."[90]

எனும் ஏலாதிப் பாடலில் கணிமேதாவியார் உரைக்கின்றார். நண்பர்க்கு வரும் இறப்பு முதலியவற்றைத் தமக்கு வந்தாற்போலக் காணும் இயல்பே நல்ல நண்பர்களின் நல்ல இயல்பாகும் என்று எடுத்துரைக்கின்றார். நட்பில் செய்யக் கூடாதவை,

"இடாஇன்னா நட்டார்கண் ஈயாமை இன்னா

தொடர்பின்னா நன்னார்கண் தூயார்ப் - படர்பின்னா

கண்டல் அவிர்பூங் கதுப்பினாய் இன்னாதே

கொண்ட விரதங் குறைவு."[91]

என்று இவற்றைக் காரியாசான் சிறுபஞ்சமூலம் பாடலில் உணர்த்துகின்றார். நண்பர்களுக்குத் துன்பம் செய்தலும், அவர்களுக்குத் துன்பம் வந்த காலத்தில் உதவாது இருத்தலும் தீய குணங்களாகும் என்கிறார். நல்லவர்கள் தம் நண்பர்களிடத்தில் தாம் வேறு, அவர் வேறு என்னும் வேறுபாடின்றி பழகுவார்கள் என்பதை,

"ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்

கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே

விட்டாங் ககலா முழுமெய்யும் கொள்பவே

நட்டாரை ஒட்டி யுழி."[92]

எனும் பழமொழிநானூறுப் பாடலில் முன்றுறையரையனார் விளக்குகின்றார். சிவன் ஒரு பாகத்தில் உமையாளைக் கொண்டான். நல்லோர் தம் நண்பரை

மெய் முழுதும் கொண்டார் என நல்லோரது நட்பின் திறம் உயர்த்திக் கூறப்பட்டது. நல்லவர்கள் தம் நண்பர்கள் அடைந்த இன்ப, துன்பங்கள் அனைத்தும் தாம் அடைந்ததாகவே எண்ணுவார்கள் என்கிறார். நட்பு நீடித்து நிற்பது பற்றி முன்றுறையரையனார்,

"தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம் - அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப
ஒருவர் பொறையிருவர் நட்பு."[93]

எனக் கூறுகின்றார். நண்பர்கள் இருவரும் பொறுமை இல்லாதவராக இருந்தால் அவர்களது நட்பு நீடித்து நிற்காது. அதனால் இருவருள் ஒருவராவது பொறுமைக்குணம் உடையவராக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அவர்களது நட்பு நீடித்து நிற்கும் என விளக்குகின்றார். இக்கருத்தைப் போன்றே வள்ளுவரும்,

" குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு."[94]

என்று குறள்வழி விளக்குகின்றார். நண்பர் செய்த தீமையைப் பழிக்கஞ்சிப் பொறுத்துக் கொண்ட பொறுமை உடையானது நட்பினை விலை கொடுத்தாவது வாங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார். தீயவர்களின் நட்பு பற்றி,

"குலஞ்சிதைக்குங் கூடார்கண் கூடி விடின்"[95]

என நான்மணிக்கடிகைப் பாடலில் விளம்பிநாகனார் எடுத்துரைக்கின்றார். தீயவர்களின் நட்பு தன் குலத்தை அழித்துவிடும் என்கின்றார். தன்னுடைய நண்பருக்கு நன்மைகள் செய்வது இனிமை உடையதாகும் என்பதை பூதஞ்சேந்தனார்,

"நட்டார்க்கு நல்ல செயலினி தெத்துணையும்

ஒட்டாரை ஒட்டிக் கொளல்அதனின் முன்இனிதே

பற்பல தானியத்தது ஆகிப் பலருடையும்

மெய்த்துணையுஞ் சேரல் இனிது."[96]

என்று இனியவைநாற்பதில் நட்பின் சிறப்பை உணர்த்துகின்றார். தன் பகைவரோடு சேராதவரை நட்பாக்கிக் கொள்ளுதல் மிகவும் இனிமை உடையதாகும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே வள்ளுவரும்,

" நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே

ஒட்டாரை ஒட்டிக் கொளல்."[97]

எனக் குறள்வழி விளக்குகின்றார். நண்பர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றார்.நட்பு கொண்டாரை புறங்கூறாமல் வாழ்வது மிகவும் இனிமை கொண்டதாகும் என்பதை,

"நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே"[98]

எனும் இனியவைநாற்பதுப் பாடலில் பூதஞ்சேந்தனார் உரைக்கின்றார். நண்பர் இல்லாதபோது அவரைப் பற்றி தவறாகப் பேசக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். நட்பு கொள்பவர் பற்றி ஔவையார்,

"இணக்கம் அறிந்து இணங்கு."[99]

என்று ஆத்திசூடிப் பாடலில் விளக்குகின்றார். ஒருவரிடம் நட்புக் கொள்ளுவதற்கு முன் அவர் நற்குணம் உடையவரா என்பதைத் தீர அறிந்து அதன்பின் நட்புக் கொள்ள வேண்டும் என்கிறார். நட்புக் கொள்ளத் தகாதவர்கள் பற்றி,

"மூர்க்கரோடு இணங்கேல்" [100]

என ஔவையார் எடுத்துரைக்கின்றார். அறிவற்ற முரடர்களோடு நட்புக் கொள்ளக் கூடாது என்று உரைக்கின்றார். இக்கருத்தைப் போன்றே வெற்றி வேட்கையில் அதிவீரராமபாண்டியன்,

" நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை

நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே."[101]

எனும் பாடலில் உணர்த்துகின்றார். நூறு ஆண்டுகள் பழகிய போதிலும் முரடர் நட்பு நீர்ப்பாசி போல் இருக்குமே தவிர வேர் விடாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். நல்லவர்களின் நட்பு பற்றி,

" ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை

இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே."[102]

என்று அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கைப் பாடலில் விளக்குகின்றார். ஒரு நாள் பழகிவிட்டாலும் பெரியோருடைய நட்பு நிலத்தைக் குடைந்து பூமிக்குள் வேர்விடுவது போன்றதாகும் என்கிறார். முரடர்களின் நட்பை விட்டுவிட்டு நல்லவர்களின் நட்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை அறியமுடிகின்றது. இக்கருத்தைப் போன்றே நன்னெறியில் சிவப்பிரகாசசுவாமிகள்,

"நல்லார் செய்யும் கேண்மை நாள்தோறும் நன்றாகும்

அல்லார் செய்யும் கேண்மை ஆகாதே – நல்லாய்கேள்

காய்முற்றின் தின்தீங் கனியாம் இளம் தளிர்நாள்

போய் முற்றின் என் ஆகிப் போம்."[103]

எனக் கூறுகின்றார். காய் முற்றினால் சுவையான கனியாகும். இளம் தளிர் முற்றினால் என்ன பயன். அதுபோலவே நல்லவர் நட்பானது நாள்தோறும் நன்மை தரும். பொல்லாதவர் நட்பு அவ்வாறு ஆகாது என எடுத்துரைக்கின்றார்.

நட்பு கொண்டவர்கள் நஞ்சைக் கொடுத்தாலுங்கூட அவர்கள் கொடுக்கும் நஞ்சையும் உண்பார்கள் என்பதை,

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" [104]

எனும் நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றது. இதே போன்று வள்ளுவரும்,

" பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர்" [105]

என்றுக் கூறுகின்றார். நல்ல பண்புடையவர் தமது நண்பர் தாம் உண்ணும் உணவிலே நஞ்சை ஊற்றக்கண்டும் அதனை வெறுக்காமல் உண்டு அவரோடு நட்பாகவே இருப்பர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

**ஈகை**

மனிதன் செய்யும் அறங்களில் தலைசிறந்ததாக எண்ணப்படுவது ஈகையாகும். பயனை எதிர்நோக்காது செய்யப்படும் அறமே ஈகை என்பதாகும். இதனை வள்ளுவர்,

" வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்

குறியெதிர்ப்பை நீரது உடைத்து"[106]

என்பதன் மூலம் அறியமுடிகிறது. வறியவர்க்கு கொடுப்பதே ஈகையாகும் என்கிறார். வறியவர்க்கு ஈதல் வேண்டும் என்பதை,

" ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"[107]

எனும் குறளின் மூலம் வள்ளுவர் வலியுறுத்துகின்றார். வறியவர்களுக்கு ஈவதால் புகழ் உண்டாகும். அப்புகழைத் தவிர உயிர்களுக்கு ஊதியமானது

வேறு ஒன்றும் இல்லை என உரைக்கின்றார். ஈகையின் சிறப்பு குறித்து நாலடியார்,

“பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யா விடினும் - கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப
என்னை உலகுய்யு மாறு”[108]

என்றப் பாடலில் எடுத்துரைக்கின்றது. மழையைப்போல மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. வறியவர்களுக்கே உதவிட வேண்டும் என்பதை,

“ஏற்றகைம் மாற்றாமை என்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன் - ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து”[109]

எனும் நாலடியார் பாடல் விளக்குகின்றது. உதவிகள் ஏதும் செய்ய இயலாத வறுமை உடையவர்களுக்கே உதவி செய்திட வேண்டும் என்கிறது. மற்றவர்களுக்கு உதவி செய்வதே ஆண்மகனின் கடமையாகும் எனக் கூறுகின்றது. பிறருக்கு உதவி செய்யும் பொருட்டுப் பொருளைத் திரட்ட வேண்டும். இதனை நல்லாதனார்,

“ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை – யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை இம்மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு”[110]

என்று திரிகடுகப் பாடலில் உணர்த்துகின்றார். அறவழியில் பொருளீட்டி, அறவழியில் மற்றவர்களுக்கு உதவுகின்றவர்கள் நரகத்தைச் சேராமல் புண்ணிய உலகம் அடைவார்கள் என எடுத்துரைக்கின்றார். இதே போன்று காரியாசான்,

“ஈவது நன்றுதீது ஈயாமை நல்லவர்

மேவது நன்றுமே வாதாரோடு – ஓவாது

கேட்டுத் தலைநிற்க கேடில் உயர்கதிக்கே

ஓட்டுத் தவநிற்கும் ஊர்ந்து”[111]

எனும் சிறுபஞ்சமூலம் பாடல் வழி விளக்குகின்றார். பிறருக்கு வேண்டிய பொருளைக் கொடுப்பதால் அழிவில்லாத வீடு பேற்றினை அடைய முடியும் என்பதை உணர்த்துகின்றார். ஒருவனது அருள் உடைமையை அவனுடைய கொடைத்தன்மையினால் அறிய முடியும் என்பதை,

“ஈர முடைமை ஈகையின் அறிப”[112]

என மதுரைக்கூடலூர்கிழார் முதுமொழிக்காஞ்சிப் பாடல் மூலம் உரைக்கின்றார். அறவழியில் பிறருக்குக் கொடுக்காதது கொடைத்தன்மை ஆகாது. இதனை மதுரைக்கூடலூர்கிழார்,

“அறத்தாற்றின் ஈயாதது ஈகையன்று” [113]

எனும் முதுமொழிக்காஞ்சிப் பாடலில் விளக்குகின்றார். அறவழியில் கொடுத்தலே கொடைத்தன்மையாகும் என்று கூறுகின்றார். இதே போன்று மதுரைக்கூடலூர்கிழார்,

“இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பில்லை”[114]

என்று விளக்குகின்றார். ஈதலினால் இம்மைப் பயனும், மறுமைப் பயனும் கிடைக்கும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே பழமொழிநானூறில் முன்றுறையரையனார்,

"சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்

பெரிய பொருள்கருது வாரே – விரிபூ

விராஅம் புனலூர வேண்டயிரைவிட்டு

வராஅஅல் வாங்கு பவர்"[115]

எனக் கூறுகின்றார். அறிவுடையோர் இம்மையில் இயன்ற அறத்தைச் செய்து மறுமையில் வீடுபேற்றை அடைவார்கள் என்கிறார். இந்தப் பிறவியில் செய்கின்ற உதவியே மறுப்பிறவியில் பெரும் பேறடைய முடியும் என்பதை அறியமுடிகிறது. வறியவர்களுக்கு பொருள் கொடுப்பது பற்றி,

" நினைத்த திதுவென்றந் நீர்மையை நோக்கி

மனத்த தறிந்தீவார் மாண்டார் - புனத்த

குடிஞை யிரட்டும் குளிர்வரை நாட

கடிஞையில் கலலிடுவா ரில்"[116]

என்று முன்றுறையரையனார் பழமொழிநானூறுப் பாடலில் விளக்குகின்றார். வறியவர்களின் முகத்தைப் பார்த்து வேண்டும் பொருளைக் குறிப்பறிந்து கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கின்றவனே சிறந்த கொடையாளி ஆவான் என்றுக் கூறுகின்றார். ஈகையின் சிறப்பு செல்வத்தால் உண்டாகும் என்பதை,

"வளப்பாத்தி யுள்வளரும் வண்மை"[117]

என்றும்,

"சிறந்த அறக்களி இல்லாதார்க் கீயுமுன் தோன்றும்"[118]

என்றும் விளம்பிநாகனார் நான்மணிக்கடிகைப் பாடலின்மூலம் உணர்த்துகின்றார். வறியவர்களுக்குக் கொடுப்பதால் செல்வர்களுக்கு உண்மையான மகிழ்ச்சி உண்டாகும் என்கிறார். ஈகை பற்றி ஔவையார்,

"அறஞ்செய விரும்பு"[119]

"இயல்வது கரவேல்"[120]

"ஐயம் இட்டு உண்"[121]

எனும் ஆத்திசூடிப் பாடலில் விளக்குகின்றார். தர்மம் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும் என்றும், செய்ய முடிந்ததை செய்யாமல் மறைத்து வைக்கக்கூடாது என்றும், யாசிப்பவருக்கு உணவு அளித்தபின்னர் சாப்பிடவேண்டும் எனவும் கூறுகின்றார். மற்றவர்களுக்குக் கொடுப்பதே சிறந்த அறமாகும் என்பதை அறியமுடிகிறது. மற்றவர்களுக்குப் பொருளை மறைக்காமல் கொடுக்க வேண்டும் என்பதனை ஔவையார்,

"மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாரும் அங்கில்லை சுரந்து அமுதம்
கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்"[122]

என எடுத்துரைக்கின்றார். மரத்தில் பழம் பழுத்திருக்கும் பொழுது வெளவால்களை யாரும் கூவி அழைப்பதில்லை, கன்றுக்குப் பசு பால் சுரந்து கொடுப்பதுபோல், தாராளமாக வாரி வழங்கினால் உலகில் உள்ளோர் அனைவரும் உறவினர் போல் வருவது இயல்பு என்கிறார். எம் தந்தை இரப்பவர்க்கெல்லாம் கொடுத்து ஏழையானார் என்று எண்ணி அவர் மைந்தர் கொடாமல் இருக்க மாட்டார். இதனை சிவப்பிரகாச சுவாமிகள்,

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்றவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ – பைந்தொடீ
நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்
கன்றும் உதவும் கனி" [123]

எனும் நன்னெறிப் பாடலில் விளக்குகின்றார். இலையும் பழமும் கொடுத்து அழிந்த வாழை மரத்தின் கீழே தோன்றிய கன்றும்  மரமாகி கனி கொடுத்து உதவுவதைப் போல மற்றவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார். வறியவர்களுக்கு உதவ வேண்டும் என்பதை,

''தானறிந்தோ ருக்குதவி தன்னா லமையுமெனில்
தானுவந் தீதல் தலையாமே – ஆனதனாற்
சொன்னாற் புரிதலிடை சொல்லியுமன் னாள்மறுத்துப்
பின்னாட் பிரிவதுவே பின்"[124]

என்று நீதிவெண்பாப் பாடல் உணர்த்துகின்றது. இல்லாதவர்களுக்கு அவர்கள் கேட்குமுன் தன்னால் இயன்றதைக் கொடுத்து உதவ வேண்டும் எனக் கூறுகின்றது. ஈகையில் சிறந்தது உணவு கொடுத்தல் என்பதை அறநெறிச்சாரம்,

"ஒன்றாக நல்லது உயிரோம்பல் ஆங்கதன்பின்
நன்றாய்ந் தடங்கினார்க் கீத்துண்டல் - என்றிரண்டும்

குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயில் திறந்து"[125]

என்றப் பாடலில் உணர்த்துகின்றது. உணவு முதலியன கொடுத்து உதவுகின்றவர்களுக்கு மேலுலக வாயில் திறந்து இருக்கும் என்கின்றது. இக்கருத்தைப் போன்றே புறநானூறில்,

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"[126]

எனும் பாடல் விளக்குகின்றது. உணவு கொடுத்தவர், உயிரைக் கொடுத்தோருக்குச் சமமாக எண்ணப்படுவார் என்கிறது. வறுமையற்ற வாழ்விலே மக்கள் அனைவரும் வாழவேண்டும். இதனை புறநானூறு,

“ஈயென லிரத்த லிழிந்தன் றதனெதிர்

ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று

கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்

கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று” [127]

என எடுத்துரைக்கின்றது. வறுமையால் வாடுகின்றேன் எனக்கு ஏதேனும் கொடு என்று இரப்பது இழிவானது. இவ்வாறு இரப்போர்க்கு இல்லையென்று உரைப்பது இரப்பதைக் காட்டிலும் இழிவானது. வறியோரைக் கண்டால் அவர்கள் வாய்விட்டுக் கேட்காமலே அவர்க்கு வேண்டுவன கொடுத்தலே உயர்ந்த குணம். அப்படிக் கொடுக்கும் போது அதற்கு எதிராக நீங்கள் கொடுப்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று மறுப்பது அதைக் காட்டிலும் உயர்ந்த குணமாகும். கொள்வோரும் கொடுப்போருமற்ற ஒரு சமுதாய வாழ்வு இவ்வுலகில் தோன்ற வேண்டும் என்கிறது. இல்லையென்று சொல்லிக்கொண்டு வந்து இரந்தோர்க்குத் தன்னால் முடிந்ததை இல்லையென்று சொல்லி மறைக்கக் கூடாது என்பதை,

“இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்

வல்லா நெஞ்சம்” [128]

எனும் அகநானூறுப் பாடல் உரைக்கின்றது. இதே போன்று,

“நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்

பயனின் மையிற் பற்றுவிட் டொரூஉம்

நயனின் மாக்கள்” [129]

எனும் அகநானூறுப் பாடலில் இல்லாதவர்க்குத் தன்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். இதுவே மனிதத் தன்மை என்பதை வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு குடும்பமும் வறுமையின்றி நன்றாக வாழ வேண்டும். எல்லாக் குடும்பங்களிலும் உணவுப் பொருள்களும் ஏனைய செல்வங்களும் ஏராளமாக

இருக்க வேண்டும். இல்லற தர்மம் இனிது நடைபெற்று எல்லோரும் இன்புற வேண்டும். இதனை ஐங்குறுநூறு,

"நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க

வெனவேட் டோளே யாயே" [130]

"விளைக வயலே வருக விரவல

ரெனவேட் டோளே யாயே"[131]

"பால்பல வூறுக பகடுபல சிறக்க

வெனவேட் டோளே யாயே"[132]

என்றப் பாடல்கள் வழி உணர்த்துகின்றது. நெல் முதலிய பல தானியங்களும், பொன் மிகவும் நிறைந்திருக்க வேண்டும், வயல்களிலே தானியங்கள் நன்றாக விளையட்டும், இரவலர்கள் உதவி வேண்டி ஏராளமாக வரட்டும், பால்தரும் பசுக்களெல்லாம் நிறைய பாலைச் சுரக்கவேண்டும், உழுவதற்கேற்ற காளைகள் பலவாகப் பெருக வேண்டும் என்று இல்லறப் பெண் விரும்புவதாக கூறப்பட்டு உள்ளன. தான் தேடிய செல்வத்தைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்ணவேண்டும் என்பதை வள்ளுவர்,

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"[133]

எனக் கூறுகின்றார்.

**விருந்தோம்பல்**

இல்லறக் கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பல் உள்ளது. விருந்து என்னும் சொல் 'புதுமை' , 'சிறப்பு உணவு' என்றப் பொருளைக் குறித்தது. ஓம்புதல் என்பது 'பாதுகாத்தல்' என்றப் பொருளைத் தரும். இதனால் 'விருந்தோம்பல்' என்பது விருந்தினரைப் பாதுகாத்துச் செய்தல் என்ற

பொருளைக் குறிக்கின்றது. நம் இல்லத்திற்கு வருகின்ற விருந்தினர்களை இன்முகத்தோடு உபசரித்தல் வேண்டும். விருந்தோம்பலின் சிறப்புப் பற்றி வள்ளுவர்,

“இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி

வேளாண்மை செய்தல் பொருட்டு”[134]

எனும் குறள்வழி விளக்குகின்றார். வீட்டில் இருந்து பொருள்களைப் பாதுகாத்து இல்வாழ்க்கை நடத்துவதின் நோக்கமே விருந்தோம்பல் செய்து மேன்மை பெறுவதற்கே என்கிறார். அமிழ்தமே கிடைத்தாலும் தனியாக உண்ணமாட்டார்கள் என்பதை,

“விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா

மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று” [135]

என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். விருந்தினராக வந்தவர் வீட்டின் வெளியே இருக்கத் தான் மட்டும் சாவாமருந்தாகிய அமிழ்தமே கிடைத்தாலும் உண்ணக்கூடாது. அது விரும்பத்தகாத செயலாகும் எனக் கூறுகின்றார். இக்கருத்தைப் போன்றே புறநானூறு,

“உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்

தமியர் உண்டலும் இலரே”[136]

எனும் பாடல் வழி உணர்த்துகின்றது. இந்திரருக்குரிய அமிழ்தம் தமக்குக் கிடைத்தாலும் அதனை இனிதென்று கருதித் தனித்து உண்பவர்கள் இல்லாததால் தான் இந்த உலகம் நிலைபெற்று உள்ளது என்பதை அறியமுடிகிறது. இல்லம் தேடி வந்த விருந்தினர் மட்டும் அல்லாது, இனி வருகின்ற விருந்தினரை உபசரிக்க எதிர் நோக்குதல் பற்றி,

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு”[137]

என வள்ளுவர் கூறுகின்றார். வந்த விருந்தினரைப் போற்றி இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான் என்பதை எடுத்துரைக்கின்றார். அன்பில்லாமல் ஒருவருக்கு விருந்தளிப்பது எத்தகையது என்பதனை நாலடியார்,

“பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்

அக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலின்

உப்பிலிப் புற்கை உயிர்போற் கிளைஞர்மாட்டு

எக்கலத் தானு மினிது”[138]

எனும் பாடல் மூலமும்,

“விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்

வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம் - விருப்புடைத்

தன்போல்வா ரில்லுள் தயங்குநீர்த் தண்புற்கை

என்போ டியைந்த அமிழ்து”[139]

எனும் பாடலின் மூலமும் உணர்த்துகின்றது. அன்பு இல்லாதவர் வீட்டில் உண்ணுகின்ற கறி உணவைவிட அன்புடையவர் வீட்டில் உண்ணும் கஞ்சி அமிழ்தம் போன்றதாகும் என்பதை உணர்த்துகின்றது. அன்பு மிகுதியோடு ஒருவரை இன்முகத்தோடு வரவேற்று உணவளிப்பது இனிமையான ஒன்றாகும். அதற்கு இணையானது ஒன்றுமில்லை எனச் சுட்டுகின்றது. இதனையே வள்ளுவரும்,

“ மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து”[140]

எனக் கூறுகின்றார். அனிச்சம் பூ மோர்ந்தவுடன் வாடிவிடும். அதுபோல் விருந்தினரிடம் இன்முகம் காட்டாமல் பார்த்தால் அவர்கள் முகம் வாடிவிடும் என்கிறார். விருந்தினரை விட்டு உண்ணாதவனைப் பற்றி நல்லாதனார்,

“வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்”[141]

என உரைக்கின்றார். விருந்தினர் பசித்திருக்கத் தான்மட்டும் தனியாக உண்ணாதவன் பிறருக்கு உதவி செய்பவனாவான் என்பதை உணர்த்துகின்றார். விருந்தினருக்கு உணவு வழங்க வேண்டிய நாள்கள் குறித்து வண்கயத்தூர்முள்ளியார்,

“கல்லியாணம் தேவர் பிதிர்விழா வேள்வி – என்று
ஐவகை நாளும் இகழாது அறம்செய்க
பெய்க விருந்திற்கும் கூழ்”[142]

எனும் ஆசாரக்கோவைப் பாடலின் மூலம் உணர்த்துகின்றார். தன்னுடைய திருமணநாள், தேவர்க்குரிய திருவிழா நாள், பிதிரருக்குச் சிறப்புச் செய்யும் நாள், விழாநாள், யாகம் செய்யும் நாள் என்ற இந்த ஐவகை நாட்களிலும் தவறாமல் அறம் செய்தல் வேண்டும். அந்நாளில் வருகின்ற விருந்தினருக்கு உணவு வழங்கல் வேண்டும் என எடுத்துரைக்கின்றார். தம் இல்லத்திற்கு வந்த விருந்தினருக்குச் செய்ய வேண்டிய சிறப்புகள் பற்றி,

“முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப தலைச் சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு”[143]

என வண்கயத்தூர்முள்ளியார் ஆசாரக்கோவைப் பாடலில் கூறுகின்றார். தன்னைத் தேடி வந்த விருந்தினரிடம் புன்முறுவலோடு இனிய சொற்களைக் கூறி வரவேற்று, அவர்களுக்கு உணவளித்தலுடன் தங்க இடம் கொடுத்தல்

வேண்டும் என்கிறார். இவைகளே விருந்தினருக்குச் செய்ய வேண்டிய சிறப்புகளாகும் என்பதை அறியமுடிகிறது. இக்கருத்தைப் போன்றே ஏலாதியில்,

"இன்சொல் அளாவல் இடம் இனிதூண் யாவர்க்கும்
வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்தேய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து"[144]

எனும் பாடலில் கணிமேதாவியார் எடுத்துரைக்கின்றார். விருந்தினராய் வருகின்றவர்களிடம் இன்சொல் கூறி, அறுசுவை உணவு அளிக்கின்றவனை தேவர்கள் விருந்தினராய் ஏற்றுக்கொள்வார்கள் எனக்கூறுகின்றார். விருந்தினருடன் பகிர்ந்து உண்ணவேண்டும் என்பதை ஔவையார்,

"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"[145]

என்று கொன்றைவேந்தன் பாடலில் விளக்குகின்றார். அமிர்தமே கிடைத்தாலும் விருந்தினர்களுடன் சாப்பிடுவது சிறப்பாகும் எனக் கூறுகின்றார். இல்லற தர்மம் என்பது,

"விருந்தில்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்"[146]

என ஔவையார் கொன்றைவேந்தன் பாடலில் உரைக்கின்றார். விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாதவர்களிடம் இல்லறத்துக்கு நிறைவான சிறப்பு இல்லை என்கிறார். விருந்தினரை உபசரிப்பதே இல்லற தர்மம் ஆகும் என்பதை அறியமுடிகிறது. விருந்தோம்பாமை பெருங்குற்றமாக எண்ணப்பட்டதென்று சிலப்பதிகாரத்தில்,

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[147]

எனும் பாடலில் இளங்கோவடிகள் கூறுகின்றார். உயர்ந்த சிறப்பினை உடைய அறவோர், பார்ப்பனர், துறவிகள் என்ற இவர்களுக்கு விருந்து அளிக்கும் தன்மையை இழந்து விட்டேன் என்று கண்ணகி கூறுகின்றாள். அதனால் விருந்தினரை உபசரிக்காமல் இருந்தால் அது பெரும் குற்றம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. விருந்தினரை உறவுமுறை வைத்து அழைத்தது பற்றி,

"மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்"[148]

என்று மலைபடுகடாம் பாடல் உணர்த்துகின்றது. விருந்தினரை தமது இல்லத்திற்கு அழைப்பதற்கு வீட்டின் முன் தங்கள் மக்களை நிறுத்தி உறவு முறையில் அழைத்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. விருந்தினருக்குப் படைக்கின்ற உணவு பற்றி,

"முகிழ்த்தகை முரவை போகிய முரியா அரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்"[149]

எனும் பொருநராற்றுப்படைப் பாடல் விளக்குகின்றது. முல்லை மொட்டுப்போல இடைமுறியாத அரிசியில் ஆக்கப்பட்ட சோற்றை விருந்தினருக்குப் படைத்துள்ளனர் எனக் கூறுகின்றது. விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்குத் தேவையானவற்றை அறிந்து கொண்டு உபசரிக்க வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

**அரசியல்**

அரசன் வெற்றியுடன் வாழவேண்டும். குடிமக்கள் குறைகளை நீக்குவதே அரசாட்சியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இக்கொள்கை உள்ள ஆட்சியை மக்கள் அனைவரும் விரும்புவர். இத்தகைய அரசால்தான் நாட்டிலே நல்லறங்கள் நடைபெறும்,அமைதி நிலவும், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ முடியும். அரசனுடைய செங்கோலை நம்பி மக்கள் வாழ்கின்றனர் என்பதனை வள்ளுவர்,

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்

கோல்நோக்கி வாழும் குடி"[150]

எனும் குறள்வழி உணர்த்துகின்றார். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்வதுபோல் மக்கள் அரசனுடைய செம்மையான ஆட்சிமுறையை நம்பி வாழ்கின்றனர். அதனால் அரசன் நீதி தவறாமல் அரசாட்சி செய்ய வேண்டும் என எடுத்துரைக்கின்றார். நீதி தவறாமல் ஆட்சி செய்யும் அரசன் இருக்கின்ற நாட்டில் மழை தவறாமல் பொழியும். இதனை வள்ளுவர்,

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட

பெயலும் விளையுளும் தொக்கு"[151]

என்றக் குறளின் மூலம் விளக்குகின்றார். நீதிமுறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவமழையும், விளைபொருளும் ஒரே அளவாக இருக்கும் என்கிறார். நீதிமுறை அரசனை காப்பாற்றும் என்பதை வள்ளுவர்,

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டாச் செயின்'' [152]

என உரைக்கின்றார். உலகத்தில் உள்ள மக்களை எல்லாம் அரசன் காப்பாற்றுவான். நீதி தவறாமல் ஆட்சி செய்தால் அந்த நீதி முறையே அரசனை காத்து நிற்கும் என்று உணர்த்துகின்றார். அரசன் நடுநிலையிலிருந்து நீதி கூற வேண்டும். இதனை முன்றுறையரையனார்,

"எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமால்

தங்கண்ண ரானும் தகவில கண்டக்கால்

வன்கண்ண னாகி ஒறுக்க ஒறுக்கல்லா

மென்கண்ணன் ஆளான் அரசு"[153]

எனும் பழமொழிநானூறுப் பாடல் வழி உணர்த்துகின்றார் அரசன் நீதி கூறுமிடத்து நடுவுநிலையிலிருந்து நீதி கூறவேண்டும். அதுதான் அவனுடைய ஆட்சிக்குச் சிறப்பாகும். நண்பர், பகைவர் என வேறுபாடுகாட்டினால் அவனுடைய அரசாட்சிக்கு அது இழிவான செயலாகும் எனக் கூறுகின்றார். அரசர்க்கு அழகு என்பது,

"மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை'[154]

என அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கையில் எடுத்துரைக்கின்றார். அரசர்க்கு அழகு நீதியுடன் ஆட்சி புரிதல் என்கிறார். நீதி தவறி ஆட்சி செய்தால் அது அரசனை அழித்துவிடும் என்பதை உணர்த்துகின்றார். அரசன் வரிவசூல் செய்யும் முறைபற்றி அதிவீரராமபாண்டியன்,

"குடி அலைத்து இரந்து வெங்கோலொடு நின்ற
முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே"[155]

என்று விளக்குகின்றார். குடிமக்களை துன்புறுத்தி வரிவசூல் செய்து கொடுமையான ஆட்சிபுரியும் வேந்தன் எனப்படும் கொடியவனும் பதரே என உரைக்கின்றார். இக்கருத்தைப் போன்றே பழமொழிநானூறில்,

"பொருத்தம் அழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்தம் அடிநிழ லாரை – வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ
வண்டுதா துண்டு விடல்"[156]

எனும் பாடல் உணர்த்துகின்றது. அரசன் மக்களிடம் வரிவாங்குவது அவர்களை வருத்தாமல் வாங்க வேண்டும் என முன்றுறையரையனார் எடுத்துரைக்கின்றார். அரசன் செங்கோல் வழுவாமல் அரசாட்சி செய்ய வேண்டும் அதுவே அவனை புகழடையச் செய்யும் என்று உணர்த்துகின்றது.

**துறவறம்**

இல்லறத்தை வழுவாது வாழ்ந்தபின் அடுத்து எவ்வித ஆசையுமின்றி இல்லறப்பற்று நீங்கி வாழக்கூடிய வாழ்க்கை துறவறம் எனப்படும். அத்தகு துறவறத்தை மேற்கொண்டபின் ஆற்ற வேண்டிய அறங்கள் பல. அவை சமுதாயத்திற்கு பயன்தரும் வகையில் இருப்பது நன்று. எல்லாப் பொருள்களும் உள்ள காலத்திலேயே துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்,

" வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்

ஈண்டுஇயற் பால பல"[157]

என எடுத்துரைக்கின்றார். துறவறத்தினால் இன்பங்கள் பல உண்டு என்கிறார். துன்பங்கள் விடாமல் பற்றிக் கொள்ளும் என்பதை,

" பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்

பற்றி விடாஅ தவர்க்கு"[158]

என்று வள்ளுவர் உணர்த்துகின்றார். யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் பற்றிக் கொண்டு விடாதவரை துன்பங்களும் விடாமல் அவர்களைப் பற்றிக் கொள்ளும் என்கிறார். ஆசையை வெறுத்தவர்கள் மட்டுமே துறவறத்தை மேற்கொள்ள முடியும் என்பதை உரைக்கின்றார். துறவறம் மேற்கொள்ளுபவர் முற்றும் துறக்க வேண்டும். இதனை வள்ளுவர்,

" தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி

வலைப்பட்டார் மற்றை யவர்"[159]

எனும் குறள் மூலம் விளக்குகின்றார். முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையை அடைய முடியும். அவ்வாறு துறக்காதவர்கள் அறியாமையாகிய வலையில்

அகப்பட்டு துன்பம் அடைவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். இக்கருத்தைப் போன்றே நாலடியாரில்,

"இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலிஎன் றிவையெல்லாம்- மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாம்உய்யக் கொண்டு"[160]

எனும் பாடல் உணர்த்துகின்றது. நிலையாமையை உணர்ந்து துறவுள்ளங் கொண்டவரே துன்பங்களிலிருந்து நீங்கி பிழைப்பார்கள் என்கிறது. ஐம்புல விருப்பங்களை ஒழுக்க நெறியில் செலுத்துதல் வேண்டும் என்பதை,

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக் - கைவாய்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்"[161]

என நாலடியார் பாடல் விளக்குகின்றது. ஐம்புலன்களையும் ஒழுக்க நெறியில் செலுத்துகின்றவனே வீடுபேறு அடைய முடியும் என்பதை வலியுறுத்துகின்றது. இதே போன்று வள்ளுவர்,

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு"[162]

எனும் குறளில் விளக்குகின்றார். ஐம்புலன்களின் ஆசையை வெல்லுதல் வேண்டும். அவர்களால் மட்டுமே தவ வலிமை பெற முடியும் என்பதை உணர்த்துகின்றார். மனம், மொழி, மெய் ஆகிய மூன்று அடக்கமும் இன்றியமையாதன என்பதை நல்லாதனார்,

"வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை அடங்குதல் திப்பியமாம் - பொய்யின்றி
நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்தில் தீர்ந்த பொருள்"[163]

என்று திரிகடுகப் பாடலில் உரைக்கின்றார். மனம், மொழி, மெய் என்ற மூன்றையும் அடக்குகின்றவர் முக்தி பெறுவார்கள் என்று எடுத்துரைக்கின்றார். துறவிகளுக்கு இன்றியமையாதது பொறுமை. இதனைக் காரியாசான்,

"போர்த்து முரிந்திட்டும் பூசியும் நீட்டியும்,
ஓர்த்தொரு பால் மறைத்து உண்பான்மேய் - ஓர்த்த
அறமாம்மேல் சொற்பொறுக்க அன்றேல் கலிக்கண்
துறவறம் பொய் இல்லறமே வாய்"[164]

எனும் சிறுபஞ்சமூலம் பாடலில் விளக்குகின்றார். உடம்பை ஆடையால் போர்த்தியும், உடுத்த உடையைக் களைந்தும், உடம்பு முழுவதும் திருநீறு பூசியும், சடையை வளர்த்தும், உடம்பில் ஒரு பாகத்தை மறைத்தும், உண்பதற்கு மேற்கொண்ட இவ்வேடங்கள் ஐந்தும் துறவறத்திற்கு உரியனவாகும். அத்துறவறத்தில் பிறர் சொல்லும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். பொறுத்துக் கொள்ளாவிட்டால் துறவறம் பொய்யாகி விடும் எனக் கூறுகின்றார். துறவிகள் ஐம்புலன்களையும் அடக்க வேண்டும் என்பதை,

"நெடுக்கல் குறுக்கல் துறைநீர் நீடு ஆடல்
வடுத்தீர் பகல்வாய் உறையே – வடுத்தீரா
ஆகும் அந் நான் கொழித்து ஐந்தடக்கு வானாகின்
வேகும்பம் வேண்டான் விடும்"[165]

என்று காரியாசான் சிறுபஞ்சமூலம் பாடலில் உணர்த்துகின்றார். சடை வளர்த்தல் முதலியவற்றால் பிறவி நீங்காது. ஐம்புலன்களை அடக்கினால்தான் பிறவி நீங்கும் என்கிறார். தவம் செய்தல் குறித்து மதுரைக்கூடலூர்கிழார்,

"திறத்தாற்றின் நோலா ததுநோன் பன்று"[166]

"வாலியன் அல்லாதோன் தவம்செய் தல்பொய்"[167]

"நிற்றல் வேண்டுவோன் தவம் செயல் தண்டாண்"[168]

என முதுமொழிக்காஞ்சிப் பாடலில் விளக்குகின்றார். தகுதிக்கேற்ற வகையில் தவம் செய்ய வேண்டும் என்றும், தவத்திற்கு உள்ளத்தூய்மை மிக இன்றியமையாதது என்றும், வீடு பேற்றினை விரும்புகின்றவன் தவத்தைச் செய்வான் என்றும் எடுத்துரைக்கின்றார். தன்னால் கடைபிடிக்க முடியும் என்பவர்கள் தான் துறவறத்தை மேற்கொள்ள வேண்டும். அவர்களால் தான் வீடுபேறை அடையமுடியும் என்பதை அறியமுடிகிறது. தவங்களைச் செய்கின்றவனுக்கு வீடுபேறு கிடைக்கும் என்பதைக் கணிமேதாவியார்,

" உயர்ந்தான் தலைவனென்று ஒப்படைத்தான் நோக்கி
உயர்ந்தான்நூல் ஓதி ஒடுங்கி – உயர்ந்தான்
அருந்தவம் ஆற்றச் செயின் வீடாம் என்றார்
பெருந்தவம் செய்தார் பெரிது'[169]

என்ற ஏலாதிப் பாடலில் விளக்குகின்றார். இறைவன் நெறி ஒழுகுவார்க்கு வீடு பேறு உண்டாகும் எனக் கூறுகின்றார். ஐம்புலன்களை அடக்குகின்றவர்கள் முக்தியை அடைவார்கள் இதனை பொய்கையார்,

"மெய்யுணர்வே மற்றதனைக் கொள்ள விழுக்கலனாம்
பொய்யுணர்வான் ஈண்டிய எல்லாம் ஒருங்கு அழியும்

ஐயுணர்வான் ஆய்ந்து அறம்சார்பாச் சார்பு ஒறுக்க

நையா நிலைவேண்டு வார்''[170]

என்று இன்னிலைப் பாடலின் மூலம் உணர்த்துகின்றார். பொருள் எல்லாம் அழிந்துவிடக் கூடியது. அழியாத முக்தியை அடைய வேண்டும் என்றால் ஐம்புலன்களை அடக்கி வாழ வேண்டும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே பழமொழிநானூறில்,

''அடங்கி அகப்பட ஐந்தினைக் காத்துத்

தொடங்கிய மூன்றினால் மாண்டீண் - டுடம்பொழியச்

செல்லும்வாய்க் கேமம் சிறுகாலைச் செய்யாரே

கொல்லிமேல் கொட்டுவைத்தார்''[171]

என்றப் பாடலில் முன்றுறையரையனார் எடுத்துரைக்கின்றார். குறிப்பிட்ட காலத்தில் வீடுபேறு அடைய வேண்டும் என்றால் ஐம்புலன்களையும் அடக்கி எந்த பற்று மீதும் ஆசை கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றார். முக்தி பெறும் மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை ஔவையார்,

''வீடு பேற நில்''[172]

எனும் ஆத்திசூடிப் பாடல் மூலம் விளக்குகின்றார். தவஒழுக்கம் மேற்கொண்டால் வீடுபேறு அடையும் மார்க்கத்தைப் பெறலாம் என்கிறார்.

## புலால் மறுத்தல்

மனிதப் பிறவி எடுத்த அனைவரும் அனைத்து உயிர்களிடத்தும் அன்போடு இருக்கக் கூடிய இயல்பை பெற்றிருக்க வேண்டும் மற்ற உயிர்களைக் கொல்லக் கூடாது. அதனால் கொல்லாமை என்பது ஒரு சிறந்த

அறமாகப் போற்றப்படுகிறது. அந்நிலையில் எவன் ஒருவன் வாழ்கின்றானோ அவனை எல்லா உயிர்களும் வணங்கும். இதனையே வள்ளுவர்,

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்”[173]

என்று உணர்த்துகின்றார். ஒரு உயிரையும் கொல்லாமலும், புலால் உண்ணாமலும் வாழவேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார். ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட ஒரு உயிரைக் கொல்லாமல் இருக்க வேண்டும் என்பதனை வள்ளுவர்,

“அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத்து உண்ணாமை நன்று”[174]

என உரைக்கின்றார். நெய் முதலிய பொருள்களைத் தீயில் இட்டு வேள்விகள் செய்வதைவிட ஒரு உயிரைக் கொன்று அதன் உடம்பை தின்னாதிருத்தல் நன்மையாகும் என்கிறார். புலால் உண்ணாமையைக் கைவிட வேண்டும் இதனையே நாலடியார்,

“அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித்

துக்கத் தொழுநோய் எழுபவே – அக்கால்

அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற

பழவினை வந்தடைந்தக் கால்”[175]

என்றப் பாடலின் வழி உணர்த்துகின்றது. ஊன் உண்ணுவதற்கு அஞ்சி அதனை விடவேண்டும் என உரைக்கின்றது. ஓர் உயிரினை வதைத்து அதன் இறைச்சியைத் தின்கின்றவன் எந்த ஒரு அறத்தையும் உறுதியாகக் கடைப்பிடிக்க மாட்டான் என்பதை நல்லாதனார்,

“கொலைநின்று தின்றொழுகு வானும்”[176]

எனும் திரிகடுகப் பாடலில் உரைக்கின்றார். அறத்தை கடைப்பிடிப்பவர்கள் எந்த ஒரு உயிரையும் கொல்ல மாட்டார்கள் என்கின்றார். கொலை செய்தலும், புலால் உண்ணலும் துன்பத்தைத் தரும் என்பதைக் காரியாசான்,

‘‘கோறலும் நஞ்சூனைத் துய்த்தல் கொடுநஞ்சு’’[177]

எனச் சிறுபஞ்சமூலம் பாடல் வழி உணர்த்துகின்றார். இந்த கொடிய செயலைச் செய்கின்றவர்களுக்கு நஞ்சு போல் துன்பம் வரும் என்பதை எடுத்துரைக்கின்றார். பிற உயிர்களைக் கொல்லாமலும், அவற்றினுடைய ஊனை உண்ணாமலும் இருப்பவன் உயர்ந்த நிலையை அடைவான் இதனையே காரியாசான்,

‘‘உயர்கதிக்கு உய்ப்பான்
உடம்பினார் வேலி ஒருப்படுத்து ஊன்ஆரத்
தொடங்கானேல் சேறல் துணிவு’’[178]

என விளக்குகின்றார். பிறவிப் பயனை அடைய வேண்டும் என்றால் புலால் உண்ணாமலும், கொலை செய்யாமலும் இருக்க வேண்டும் என்கிறார். பிறர் புரியும் கொலைத் தொழிலை விரும்பாதவன், எந்த ஓர் உயிரையும் கொல்லாதவன், புலாலை உண்ணாதவன் விண்ணுலகத்தில் உள்ளவர்களால் போற்றப்படுவான் என்பதைக் கணிமேதாவியார்,

‘‘கொலைபுரியான் கொல்லான் புலால்மயங்கான்’’[179]

எனும் ஏலாதிப் பாடலில் எடுத்தியம்புகின்றார். மற்ற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதவனை அனைவரும் விரும்புவார்கள் என்பதை உணர்த்துகின்றார், கொலை செய்தல் குற்றம் என்பதை,

‘‘அலைப்பான் பிறவுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால அல்லாத சொல்லுதலுங் குற்றம்

கொலைப்பாலுங் குற்றமே யாம்'' [180]

என்று விளம்பிநாகனார் நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் விளக்குகின்றார். பிறவுயிர்களைக் கொன்று உண்பதற்காக வளர்த்தலுங் குற்றம், ஊனை விலைக்கு வாங்கி உண்ணலுங்குற்றம், கொலை செய்தலும் குற்றம் என உரைக்கின்றார். புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டு இவற்றை அறவே ஒழித்திட வேண்டும் என்பதனை ஔவையார்,

''புலையும் கொலையும் களவும் தவிர்''[181]

என்று கொன்றைவேந்தன் பாடல் வழி உணர்த்துகின்றார்

## இயல் சுருக்கம்

அற இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள் எனும் இவ்வியலில் இல்லறம், மக்கட்பேறு, நட்பு, ஈகை, விருந்தோம்பல், அரசியல், துறவறம், புலால் மறுத்தல் என்பவை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இல்வாழ்க்கை என்பது அன்பு, அடக்கம், ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து வழுவாமலும், புகழ்பெற வாழ்தலும் என்று விளக்கப்பட்டுள்ளன. நல்ல மனைவியும், நல்ல குழந்தைகளும் இல்வாழ்க்கைக்கு அணிகலன்களாகும். அன்போடும், அறத்தோடும் இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்பவை பற்றி ஆராயப்பட்டுள்ளன.

தன் உடலும், மனைவியும், தன்னிடத்தில் அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருளும், தான் சேர்த்து வைத்த பொருளும் பொன்னைக் காப்பதுபோல நன்கு பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்காது விட்டால் மிகுந்த துன்பம் உண்டாகும். இவை இல்லறத்தானின் கடமைகள் என்று உணர்த்தப்பட்டுள்ளன.

இல்லற வாழ்வில் அறச்செயல்கள் செய்வதால் வீடு பேறினை அடைய முடியும். தண்ணீர்ப்பந்தல் வைத்தல், நிழல்தரும் மரங்களை வைத்தல், தன் வீட்டில் பிறர் இருக்க இடம் தருதல், பிற உயிர்களுக்குப் பகிர்ந்தளித்துத் தானும் உண்ணுதல், கோவிலையும் மரங்கள் நிறைந்த சாலைகளையும் அமைத்து அழியாது நிலைபெறச் செய்தல் பெரிய அறமாகும் என எடுத்தியம்பப்பட்டுள்ளன.

பிறர் மனைவியை விரும்புகின்றவர்களுக்கு துன்பங்கள் நேரும். புண்ணியம், புகழ், சுற்றத்தாரின் நேயம், வீரம் இந்த நான்கும் நீங்கி பகை, பழி, பாவம், அச்சம் என்ற நான்கும் அவர்களை வந்து சேரும். அதனால்

இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் தகாத தீய செயல்களைச் செய்யக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளன. இரண்டு கண்களும் இணைந்து ஒரு பொருளைப் பார்ப்பது போல், கணவனும் மனைவியும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் நற்காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்வார்க்குச் சிறந்தது மக்கட்பேறே ஆகும். எல்லா சிறப்புகளையும் விட நல்ல மக்களைப் பெறுவதே மிக உயர்ந்த சிறப்பாகும். தம்முடைய குழந்தையின் சிறு கைகளால் அளாவப் பெற்ற உணவு அமிழ்தத்தைவிட இனிமையானது என்றும், குழந்தையின் மழலைப்பேச்சு இசையைவிட இனிமையானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

கறையானால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் தாங்கி நிற்பது போல் தன் தந்தையை துன்பத்திலிருந்து பாதுகாப்பது மகனின் கடமையாகும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தந்தையின் அறிவுரைக்கு மேலான வேதம் எதுவும் இல்லை. பெற்றத்தாயை விட வணங்குவதற்குச் சிறப்பான கோயில் வேறு ஒன்றும் இல்லை. பெற்றோருக்குப் பிறவி முழுவதும் உரிமையுடன் அமைந்து நிற்கும் உறவு தம் மக்களே என்றும், தாயும் - தந்தையும் நம் கண்முன்னே காணப்படும் தெய்வங்களாகும். அப்படிப்பட்ட கண்கண்ட தெய்வங்களையே நாம் முதலில் வணங்க வேண்டும் என்றும் ஆராயப்பட்டுள்ளது.

நட்புச் செய்வதற்குத் தொடர்பும், பழக்கமும் வேண்டியதில்லை. ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று. நெஞ்சம் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே சிறந்த நட்பாகும் என்று விளக்கப்பட்டுள்ளன. உடை நெகிழ்ந்தவுடன் கை உடனே உதவிக் காப்பது போல் நண்பனுக்குத் துன்பம் வந்தால் அப்பொழுதே சென்று துன்பத்தைக்

களைவதே சிறந்த நட்பாகும். நண்பனுக்கு துன்பம் உண்டான காலத்தில் உதவுகின்றவனே சிறந்த நண்பனாவான் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அன்புடனும், உள்ள ஒற்றுமையுடனும் இருப்பவனே நல்ல நண்பனாவான். நண்பர்கள் இருவரும் பொறுமைக்குணம் உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த நட்பே வளரும் என்று ஆராயப்பட்டுள்ளன.

மனிதன் செய்யும் அறங்களில் தலைசிறந்ததாக எண்ணப்படுவது ஈகையாகும். பயனை எதிர்நோக்காது செய்யப்படும் அறமே ஈகையாகும். மழையைப்போல மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். வறுமை உடையவர்களுக்கே உதவிகள் செய்திட வேண்டும். அறவழியில் பொருளீட்டி அறவழியில் மற்றவர்களுக்கு உதவிட வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுப்பதே சிறந்த அறமாகும். இலையும், பழமும் கொடுத்து அழிந்த வாழைமரத்தின் கீழே தோன்றிய கன்றும் மரமாகிக் கனி கொடுத்து உதவுவதைப் போல மற்றவர்களுக்கு உதவிட வேண்டும் என விளக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை நடத்துவதின் நோக்கம் விருந்தோம்பல் செய்து மேன்மை பெறுவதே ஆகும். விருந்தினராக வந்தவர் வீட்டின் வெளியே இருக்கத்தான் மட்டும் அமிழ்தமே கிடைத்தாலும் உண்ணக்கூடாது. விருந்தினராய் வருகின்றவர்களிடம் இன்சொல் கூறி, அறுசுவை உணவை விருந்தினருடன் பகிர்ந்து உண்ண வேண்டும். விருந்தினரை உபசரிப்பதே இல்லற தர்மம் ஆகும் என ஆராயப்பட்டுள்ளன.

அரசன் வெற்றியுடன் வாழவேண்டும். குடிமக்கள் குறைகளை நீக்குவதே அரசாட்சியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இத்தகைய அரசால்தான் நாட்டிலே நல்லறங்கள் நடைபெறும் என்று உணர்த்தப்பட்டுள்ளது.

இல்லறத்தை வழுவாது வாழ்ந்தபின் அடுத்து எவ்வித ஆசையுமின்றி இல்லறப்பற்று நீங்கி வாழக்கூடிய வாழ்க்கை துறவறம் எனப்படும். முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையை அடையமுடியும். மனிதப் பிறவி எடுத்த அனைவரும் அனைத்து உயிர்களிடமும் அன்போடு இருக்க வேண்டும். மற்ற உயிர்களைக் கொன்று அதன் இறைச்சியை உண்ணக்கூடாது என்று விளக்கப்பட்டுள்ளன.

## குறிப்புக்கள்

1. மு.வரதராசனார், திருக்குறள், பா.49, பா.11.
2. மேலது, பா. 45, ப. 11.
3. மேலது, பா. 50, ப. 11.
4. மேலது, பா. 4, ப. 11.
5. மேலது, பா. 60, ப. 13.
6. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா. 383, ப. 295.
7. மேலது, பா. 81, ப. 68.
8. மேலது, பா. 82, ப. 69.
9. மு.வரதராசனார்,மு.கூ.நூ,பா.146, ப.31.
10. மேலது, பா. 173, ப. 37.
11. துரை.இராசாராம், பதினெண்கீழ்க்கணக்கு(மூன்றாம்பகுதி), திரிகடுகம், பா.6, ப.10.
12. மேலது, பா. 40, ப. 25.
13. மேலது, ஆசாரக்கோவை, பா. 46, ப. 78.
14. மேலது, பா. 95, ப. 100.
15. மேலது, பா. 96, ப. 101.
16. மேலது, சிறுபஞ்சமூலம், பா. 25, ப. 122.
17. மேலது, பா. 36, ப. 127.
18. மேலது, பா. 63, ப.139.
19. மேலது, பா. 72, ப. 144.
20. மேலது, பா. 93, ப. 154.
21. மேலது, முதுமொழிக்காஞ்சி, அல்லபத்து, பா. 42, ப. 179.
22. மேலது, ஏலாதி, பா. 16, ப. 206.

23. மேலது, பா. 44, ப. 221.

24. மேலது, பா. 50, ப.224.

25. மேலது, இன்னிலை,பா. 20, ப. 257.

26. மேலது, பா. 22, ப.258.

27. மேலது, பா. 32, ப.263.

28. மேலது, பா. 37. ப. 266.

29. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),பதினெண்கீழ்க்கணக்கு கடுகங்கடிகை மாமூலம், நான்மணிக்கடிகை, பா. 73, ப. 66.

30. ம.இராசமாணிக்கம்பிள்ளை, பழமொழிநானூறு, பா. 330, ப.232.

31. வா.மகாதேவமுதலியார், நானாற்பது, இனியவைநாற்பது, பா.2,ப.7.

32. முல்லை முத்தையா, நீதி நூல்கள், நன்னெறி, பா. 6, ப. 116.

33. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, நீதிநூற்கொத்து (இரண்டாம் பாகம்), அறநெறிச்சாரம், பா. 164, ப. 86.

34. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா. 93, ப. 25.

35. மேலது, கொன்றைவேந்தன், பா. 3, ப. 29.

36. மேலது, பா. 61, ப. 41.

37. மேலது, வெற்றிவேற்கை, பா.59, ப.65.

38. மேலது, பா.70, ப.66.

39. மேலது, மூதுரை, பா. 21, ப.82.

40. மேலது, நல்வழி, பா. 24, ப.102.

41. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),நீதிநூற்கொத்து (இரண்டாம் பாகம்), நீதிவெண்பா, பா.11, ப.14.

42. மேலது, பா.61,ப.52.

43. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பா.165,ப.86.

44. பொ.வே.சோமசுந்தரனார், ஐங்குறுநூறு, பா.359, ப.496.

45. மு.சண்முகம்பிள்ளை, குறுந்தொகை, பா.135, ப.126.

46. மேலது, பா. 322, பா.வ: 5- 6, ப. 284.

47. அ.நாராயணசாமி ஐயர், நற்றிணை, பா.110, பா.வ:9-11, ப.189.

48. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.61, ப.15.

49. மேலது, பா. 64, ப.15.

50. மேலது, பா. 66, ப.15.

51. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா. 197, ப. 155.

52. மேலது, பா. 367, ப.282.

53. துரை.இராசாராம், மு.கூ.நூ, முதுமொழிக்காஞ்சி, இல்லைப்பத்து,பா.51,ப. 181.

54. மேலது, ஏலாதி, பா.30, ப.214.

55. மேலது, பா.31, ப.214.

56. மேலது, இன்னிலை, பா.23,ப.259.

57. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நான்மணிக்கடிகை, பா.57, ப.53.

58. முல்லை முத்தையா, மு.கூ.நூ, கொன்றைவேந்தன், பா. 37, ப.36.

59. மேலது, பா.38, ப.36.

60. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.63, ப.15.

61. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.331, ப.233.

62. மேலது, பா. 332, ப. 233.

63. வா.மகாதேவமுதலியார், மு.கூ.நூ, இனியவை நாற்பது, பா.14,ப.18.

64. கோ.இளையபெருமாள், புறநானூறு, பா.188, பா.வ: 3-7, ப.155.

65. முல்லை முத்தையா, மு.கூ.நூ, கொன்றைவேந்தன், பா.1, ப. 28.

66. மேலது, பா.8, ப.30.

67. மேலது, பா.26, ப.34.

68. மேலது, பா.27, ப.34.

69. மேலது, வெற்றிவேற்கை, பா.20, ப.59.

70. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நீதிநூற்கொத்து (இரண்டாம்பாகம்), நீதிநெறி விளக்கம், பா.81, ப.76.

71. ந.மு.வேங்கடசாமிநாட்டார், அகநானூறு,களிற்றியானைநிரை, பா.66, ப.156.

72. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 62, ப. 15.

73. மேலது, பா. 68, ப. 15.

74. மேலது, பா. 783, ப. 161.

75. மேலது, பா. 785, ப. 161.

76. மேலது, பா. 786, ப. 161.

77. மேலது, பா. 788, ப. 161.

78. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா. 238, ப. 185.

79. மேலது, பா. 211, ப. 166.

80. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா. 15, ப. 14.

81. மேலது, பா. 82, ப. 42.

82. மேலது, முதுமொழிக்காஞ்சி, அறிவுப்பத்து, பா. 13, ப. 172.

83. மேலது, துவ்வாப்பத்து, பா. 37, ப. 178.

84. மேலது, அல்லபத்து, பா. 43, ப. 180.

85. மேலது, பா. 45, ப. 180.

86. மேலது, நல்கூர்ந்தபத்து, பா. 83, ப. 189.

87. மேலது, பா. 90, ப. 191.

88. மேலது, ஏலாதி, பா. 8, ப. 203.

89. மேலது, பா. 68, ப. 233.

90. மேலது, பா. 79, ப. 238.

91. மேலது, சிறுபஞ்சமூலம், பா. 14, ப. 116.

92. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா. 124, ப. 82.

93. மேலது, பா. 132, ப. 88.

94. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 794, ப. 163.

95. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),
மு.கூ.நூ,நான்மணிக்கடிகை,பா.23, பா.வ: 3-4, ப. 25.

96. வா.மகாதேவமுதலியார், மு.கூ.நூ, இனியவை நாற்பது, பா. 17, ப. 20.

97. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 679, ப. 139.

98. வா.மகாதேவமுதலியார், மு.கூ.நூ, இனியவை நாற்பது,பா. 19, பா.வ:1, ப. 22.

99. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா. 19, ப. 12.

100. மேலது, பா, 92, ப. 25.

101. மேலது, வெற்றிவேற்கை, பா. 33, ப. 61.

102. மேலது, பா. 34, ப. 61.

103. மேலது, நன்னெறி, பா. 38, ப. 136.

104. அ.நாராயணசாமி ஐயர், மு.கூ.நூ, பா. 355, பா.வ: 6-7, ப. 601.

105. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 580, ப. 119.

106. மேலது, பா. 221, ப. 47.

107. மேலது, பா. 231, ப. 49.

108. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா. 97, ப. 80.

109. மேலது, பா. 98, ப. 81.

110. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா. 90, ப. 45.

111. மேலது, சிறுபஞ்சமூலம், பா. 94, ப. 154.

112. மேலது, முதுமொழிக்காஞ்சி, அறிவுப்பத்து, பா. 12, ப. 172.

113. மேலது, அல்லபத்து, பா. 48, ப. 181.

114. மேலது, இல்லைப்பத்து, பா. 60, ப. 184.

115. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா. 372, ப. 261.

116. மேலது, பா. 375, ப. 263.

117. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ,நான்மணிக்கடிகை, பா.16, பா.வ: 1, ப. 19.

118. மேலது, பா. 37, பா.வ: 2, ப. 37.

119. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா. 1, ப. 9.

120. மேலது, பா. 3, ப. 10.

121. மேலது, பா. 9, ப. 11.

122. மேலது, நல்வழி, பா. 29, ப. 105.

123. மேலது, நன்னெறி, பா. 17, ப. 123.

124. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ,நீதிவெண்பா, பா. 89,ப.71.

125. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பா. 180, ப. 94.

126. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ, பா. 18, பா.வ: 19, ப. 27.

127. மேலது, பா. 204, பா.வ: 1-4, ப. 167.

128. ந.மு.வேங்கடசாமிநாட்டார், மு.கூ.நூ, களிற்றியானைநிரை, பா. 53, ப. 129.

129. மேலது, பா. 71, ப. 169.

130. பொ.வே.சோமசுந்தரனார், மு.கூ.நூ, வேட்கைப்பத்து,பா. 1, பா.வ: 2-3, ப. 5.

131. மேலது, பா. 2, பா.வ: 2-3, ப. 9.

132. மேலது, பா. 3, பா.வ: 2-3, ப. 11.

133. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 322, ப. 67.

134. மேலது, பா. 81, ப. 19.

135. மேலது, பா. 82, ப. 19.

136. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ, பா. 182, ப. 152.

137. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 86, ப. 19.

138. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),நாலடியார், பா. 206, ப. 162.

139. மேலது, பா. 210, ப. 165.

140. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 90, ப. 19.

141. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா. 12, பா.வ: 2, ப. 13.

142. மேலது, ஆசாரக்கோவை, பா. 48, ப. 79.

143. மேலது, பா. 54, ப. 81.

144. மேலது, ஏலாதி, பா. 7, ப. 202.

145. முல்லை முத்தையா, மு.கூ.நூ, கொன்றைவேந்தன், பா. 70, ப. 42.

146. மேலது, பா. 83, ப. 45.

147. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கொலைக்களக்காதை, பா.வ: 71 – 73, ப. 140.

148. பொ.வே.சோமசுந்தரனார், பத்துப்பாட்டு (இரண்டாம் பகுதி), மலைபடுகடாம், பா.வ: 185, ப. 6.

149. பொ.வே.சோமசுந்தரனார், பத்துப்பாட்டு (முதற்பகுதி), பொருநராற்றுப்படை, பா.வ: 112-114, ப. 4.

150. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 542, ப. 113.

151. மேலது, பா. 545, ப. 113.

152. மேலது, பா. 547, ப. 113.

153. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா. 241, ப. 168.

154. முல்லை முத்தையா, மு.கூ.நூ, வெற்றிவேற்கை, பா. 5, ப. 57.

155. மேலது, பா. 66, ப. 66.

156. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா. 244, ப. 171.

157. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 342, ப. 71.

158. மேலது, பா. 347, ப. 71.

159. மேலது, பா. 348, ப. 71.

160. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா. 53, ப. 45.

161. மேலது, பா. 59, ப. 50.

162. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 343, ப. 71.

163. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா. 43, ப. 26.

164. மேலது, சிறுபஞ்சமூலம், பா. 67, ப. 141.

165. மேலது, பா. 69, ப. 142.

166. மேலது, முதுமொழிக்காஞ்சி, அல்லபத்து, பா. 49, ப. 181.

167. மேலது, பொய்ப்பத்து, பா. 70, ப. 186.

168. மேலது, தண்டாப்பத்து, பா. 94, ப. 192.

169. மேலது, ஏலாதி, பா. 64, ப. 231.

170. மேலது, இன்னிலை, பா. 44, ப. 270.

171. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா. 388, ப. 272.

172. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா. 101, ப. 26.

173. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா. 260, ப. 53.

174. மேலது, பா. 259, ப. 53.

175. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா. 123, ப. 100.

176. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா. 74, பா.வ: 1, ப. 39.

177. மேலது, சிறுபஞ்சமூலம், பா. 13, பா.வ: 1, ப. 116.

178. மேலது, பா. 34, பா.வ: 2-4, ப. 126.

179. மேலது, ஏலாதி, பா. 2, பா.வ: 1, ப. 200.

180. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நான்மணிக்கடிகை, பா. 28. ப. 29.

181. முல்லை முத்தையா, மு.கூ.நூ, கொன்றைவேந்தன், பா. 63, ப. 41.